Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
SPICE TRAVELS & TOURS (PVT) LTD® IATA



412, First Floor, Hospital Road, Jaffna. (Adjoining Sangeetha Mobile Links)
Fly Line Keethan - 0773 916 416 Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 17 திங்கட்கிழமை (31.01.2011) பக்கங்கள் 12 ஓசை – 123

## நீதியின் தீர்ப்பும், மக்களின் தீர்ப்பும் எமது உழைப்பிற்கு வெற்றியை வழங்கும்

### அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து நாம் தாக்கல் செய்திருந்த வேட்புமனுக்கள் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நிராகரிக்கப்பட்டதாக வெளிவந்திருக்கும் செய்தி குறித்து எமது மக்கள் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை என்றும் நல்ல தீர்ப்பு கிடைக்கும் நம்பிக்கையோடு காத்திருங்கள் என்றும் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் நாம் தேர்தலுக்காக தேர்தல் காலத்தில் மட்டும் செயற்படுகின்ற ஒரு கட்சி அல்ல. ஆயினும் தேர்தல்கள் வரும் போது அவைகளில் போட்டியிட்டு அதில் கிடைக்கின்ற அரசியல் அதிகாரங்களை

(11 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு இராணுவ பிரசன்னம் அவசியம்

### அடித்துக்கூறுகிறார் இராணுவத்தளபதி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பிற்கு இராணுவத்தின் பிரசன்னம் அவசியமானது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் இன்னமும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து 20 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அதிகளவு இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் நடைபெறவுள்ள சர்வதேச கருத்தரங்கு தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் பறிபோகும் காணி உரிமம்

# இந்திய வெளியுறவுச் செயலருக்கு மகஜர்



(வவுனியா)

**வன்னிப்பகுதியிலிருந்து இறுதி யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் ஆயிரக்கணக்கில் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் உள்ளனர். இவர்கள் காலாகாலமாக குடியிருந்த பூர்வீகப்பகுதிகளில் இவர்கள் மீண்டும் குடியமர்த்தப்படாமல் இருக்கும் இந்த நிலையில் அவர்கள் குடியிருந்த காணிகள் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் பல தமது குடியிருப்புக்காணிகள் பறிபோய்விடுமோ என்ற அச்சத்தில் உள்ளனர்.**

குறிப்பாக வடக்கின் முறிகண்டி பிரதேசத்தில் இன்னும் மீள் குடியேற்றப்பட வேண்டிய பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படாமையினால் அங்குள்ள தமது காணிகள்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலி நாவற்காட்டில் வீதி விபத்து தப்பியோடிய சாரதி மடக்கிப்பிடிப்பு

### அந்த இடத்திலேயே ஒருவர் பலி!

(அச்சுவேலி)

யாழ். பருத்தித்துறை வீதியில் நாவற்காடு என்ற இடத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளார். நேற்றுமாலை மேற்படி வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மேட்டார் சைக்கிள் ஒன்றும் சிறியரக வான் ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதிலேயே மேற்படி விபத்து நடைபெற்றது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சுதந்திர தினத்தன்று முன்னாள் புலிகள் பலருக்கு விடுதலை

புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள முன்னாள் போராளிகளினால் ஆக்கப்பட்ட கைவினை பொருட்கள் புத்தளவில் நடைபெறவுள்ள 'தயட கிருள' கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் எஸ்.ரணசிங்க தெரிவித்தார்.


புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் 4,500 முன்னாள் போராளிகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார். இவர்களுக்கு மேசன் தொழில், தச்சு தொழில், வாழ்க்கை திறன் போன்ற பல பயிற்சிகள் வழங்கப்படுவதாக பிரிகேடியர் ரணசிங்க கூறினார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு புனர்வாழ்வளிக்கப்பட்ட ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர் மீது கடற்படை தாக்குதல் பிரதமர் மன்மோகனைச் சந்திக்கிறார் கருணாநிதி

### புதுடில்லியில் இன்று முக்கிய பேச்சு



(புதுடில்லி)


இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்று புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள தமிழக முதலமைச்சர் கருணாநிதி பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்படும் விவகாரம் குறித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பாக அனைத்து மாநிலங்களின் உள்துறை அமைசசர்களின் மாநாடு புதுடில்லியில் நாளை நடைபெறவுள்ளது.

தமிழக அரசின் உள்துறை அமைச்சுக்கு பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் கருணாநிதி இம்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# கே.பி.யாழ்.நகருக்கு திடீர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும் நீடோ அமைப்பின் பணிப்பாளருமான கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் யாழ். நகருக்கு நேற்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயவே இவர் யாழ். நகருக்கு விஜயம் செய்ததாக தெரியவருகிறது.

கே.பியினால் உருவாக்கி நிர்வகிக்கப்படும் "நீடோ" அமைப்பு நேற்று காலை யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு ஒன்றை நடத்தியது. சங்க மண்டபத்தின் கேட்போர்கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும், தற்போது அரசுடன் இணைந்து செயற்பட்டு வருபவருமான கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் கே.பி. மேலும் தெரிவித்ததாவது:-

30 வருட காலப் போரால் குடாநாட்டு மக்களும் பாதிப்படைந்துள்ளனர். சமூக ஆர்வலர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய முன்பள்ளிக்கான
# புதிய கட்டடத்தை அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்





(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய முன்பள்ளிக்கான புதிய கட்டடத்தை திறந்து வைத்ததுடன் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய முன்பள்ளிக்கு புதிதாக அமையப் பெறவுள்ள சிறுவர் பூங்காவை அமைப்பதற்கும் ஒரு இலட்சம் ரூபா காசோலையை வழங்கினார்.

முன்னதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் உதயன் அவர்களும் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து மங்கள விளக்கு ஏற்றி வைக்கப் பட்டது.

புதிய கட்டடத்தை அமைச்சர் அவர்கள் நாடாவை வெட்டி திறந்து வைத்ததுடன் பெயர் பலகையினை திரைநீக்கம் செய்து வைத்தார்.

அரங்க நிகழ்வுகள் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் வசீகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சிறப்புரையாற்றும் போது,

இக் கட்டடத்தை சிறப்பான முறையில் அமைத்துள்ள 'வேல்ட் விஷன்' நிறுவனத்தினருக்கு மக்கள் சார்பில் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இங்கு பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ள போதிலும் அவற்றை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு கால அவகாசம் தேவையெனவும் குறிப்பாக இப் பிரதேச முன்பள்ளி ஆசிரியைகள் 20 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் விரையில் பெற்றுத் தர நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், கோரிக்கைகள் நியாயமான முறையில் நிவர்த்தி செய்யப்படும் என்பதுடன் கடந்த கால இருண்ட யுகத்தை மறந்து புதுயுகம் நோக்கிப் பயணிப்போம் எனவும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து முன்பள்ளிக்கு புதிதாக சிறுவர் பூங்கா அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா காசோலையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிலையத் தலைவர் வசீகரனிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில், வேல்ட் விஷன் லங்கா மாவட்ட இணைப்பாளர் றொசையோ உள்ளிட்ட துறை சார்ந்தோர் கல்வித்துறை சார்ந்தோர் எனப் பலதரப்பட்டோரும் கலந்து கொண்டனர்.

## அவை இலக்கிய சந்திப்பு

(அல்வாய்)

அல்வாய் கலையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அவை இலக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. நாடறிந்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரபல இந்திய எழுத்தாளர் சின்ன பாரதி கருத்துரை வழங்கினார். தொடர்ந்து அவை உறுப்பினர்களும் உரை நிகழ்த்தினர். (62)

## தேர்தல் வன்முறை குவியும் முறைப்பாடுகள்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 6 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றுள் நான்கு முறைப்பாடுகள் ஒரே கட்சி உறுப்பினர்களுக்குள் ஏற்பட்ட தகராறு என பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் இவ்வாறான தேர்தல் வன்முறைகளை குறைப்பதற்கு குறித்த கட்சிகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் பவ்ரல் அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை, ஒவ்வொரு வேட்பு மனுதாரர்களுக்கும் தேர்தல் சட்டங்களை புகட்டும் செயற்திட்டமொன்று நாடளாவிய ரீதியில் உள்ள சகல தேர்தல் தொகுதிகளிலும் உள்ள பொலிஸ் பிரிவினரால் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

## களம் இறங்கும் முஸ்லிம் பெண்கள்
### பொறுத்தது இனிப்போதும்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லிம் பெண்கள் முதன் முறையாக போட்டியிடுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏழு முஸ்லிம் பெண் வேட்பாளர்கள் திருகோணமலை, கிண்ணியா நகரசபை மற்றும் பிரதேச சபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்றனர்.

இந்த எழு பேரும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்களுக்கான சுய தொழில் அபிவிருத்தி, குழந்தைகளுக்கான முன்பள்ளி வாய்ப்புகள், உள்ளூர் வீதிகள் உட்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தமது தேர்தல் பரப்புரை அமைந்துள்ளதாக வேட்பாளரில் ஒருவரான செலபாடீன் அலீன் பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க திருகோணமலை மாவட்ட தேர்தல்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சியே வெற்றியீட்டும் என அக்கட்சி சூளுரைத்துள்ளது.

கிண்ணியா நகர சபை மற்றும் பிரதேச சபைத் தேர்தலில் தாம் நிச்சயம் வெற்றியீட்டுவோம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூதூர் இணைப்பாளர் நஜீப் ஏ.மஜீத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அகன்றது படை முகாம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை வீதியில் கடந்த 15 ஆண்டு காலமாக இருந்த இராணுவ முகாம் ஒன்று அகற்றப்பட்டுள்ளது. இங்கு போடப்பட்டிருந்த காவலரண்கள் யாவும் கழற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதோடு, இராணுவத்தினர் தங்கியிருந்த வீட்டினையும் உரிமையாளர்களிடம் கையளித்துள்ளனர்.

இந்த முகாமில் இருந்த இராணுவத்தினர் 2 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள புறாப்பொறுக்கி முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர். யுத்தம் நிறைவடைந்து நாட்டில் சுமூகமான சூழல் நிலவி வருவதைத் தொடர்ந்து இராணுவத்தினரால் வடக்குக், கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## தெற்கிலும் வெடி குண்டுகள் எச்சரிக்கையுடன் இருங்கள்
### பொதுமக்களிடம் இராணுவம் கோரிக்கை

கண்ணில் தென்படும் சந்தேகத்திற்குரிய பொருட்களை கையாள வேண்டாமென்றும் எச்சரிக்கையோடு நடந்துகொண்டு அண்மையிலுள்ள இராணுவ முகாமுக்கு இதையிட்டு அறிவிக்குமாறும் பொதுமக்களை இராணுவம் கேட்டுக்கொண்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

பொதுமக்களின் தகவலின் அடிப்படையில் 2 கிலோகிராம் நிறையுள்ள கிளைமோர் குண்டொன்றும் செயலற்றுப்போன 4 கைக்குண்டுகளும் நிட்டம்புவவில் அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்திலிருந்து மீட்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

யுத்தம் நடைபெற்ற வேளையில் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு மறைத்து வைத்திருக்கக் கூடிய வெடிபொருட்களையிட்டும் எச்சரிக்கையாக இருக்குமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பூநகரிக்கு பஸ் சேவை

காரைநகர் இலங்கை போக்குவரத்துச்சபை காலையிலிருந்து தினமும் பூநகரி நல்லூருக்கு பஸ் சேவை நடைபெற்று வருகிறது. காரைநகர் டிப்போவில் இருந்து தினமும் காலை 5.30 மணிக்குப் புறப்படும் பஸ் 782 பாதை ஊடாகச் சென்று யாழ்.பஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து காலை 7.00 மணிக்கு சாவகச்சேரி, தனங் கிளப்பு, கேரதீவு சங்குப்பிட்டி ஊடாக பூநகரி நல்லூரைச் சென்றடைகிறது.

பூநகரி நல்லூரில் இருந்து 9.00 மணிக்குப் புறப்படும் பஸ் யாழ்.பஸ் நிலையம் வந்து பிற்பகல் 2.00 மணிக்குப் புறப்பட்டு பூநகரி சென்று பின்னர் 4.30 மணிக்கு பூநகரியில் இருந்து புறப்பட்டு யாழ்.பஸ் நிலையம் வந்து பிற்பகல் 6.30 மணிக்கு 785 இலக்கப் பாதை ஊடாக காரைநகரை வந்தடைகிறது. (10)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் பொலிஸ் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரால் பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கில், சார்ஜன் சுனில் உரையாற்றுவதையும், யாழ். இராணுவ தலைமைப் போக்குவரத்துப் பிரிவு மேஜர் லியனகே, அதிபர் சு.சண்முககுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (10)

## வடக்கின் துரித மீட்சித் திட்டம் சர்வதேச நிறுவனங்கள் கடனுதவி

(கொழும்பு)

வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ், சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்களிடமிருந்து பெற்றுள்ள கடன் மூலம் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் பல அபிவிருத்தி கட்டுமானப் பணிகள் நடைபெறவுள்ளதாக இத்திட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர் கலாநிதி எஸ்.எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டிடம் புனரமைத்தல், மன்னார் முசலி, மடு, மாந்தை மேற்குப் பிரதேச உள் வீதிகளைப் புனரமைத்தல், மன்னார் பெரியபண்டி விரிச்சான் குளம் புனரமைத்தல், வவுனியா பிரதேசத்திலுள்ள சில பாடசாலைகளைப் புனரமைத்தல், பனிச்சன்குளம், நொச்சிக்குளம், கற்குளம், பாவட்டன்குளம், நாகர் குளம், பரசன்குளம் ஆகிய சிறு குளங்களை புனரமைத்தல் ஆகியன மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திக் கட்டுமானப் பணிகளாகுமெனவும் அவர் கூறினார்.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவியில் மூலிகைத் தோட்டத்தை புனரமைத்தல், வீதி அபிவிருத்தி திணைக்கள கட்டிடங்கள், கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, சிலாவத்தை பாடசாலை புனரமைத்தல், மேலும் கரைதுறைப்பற்று, துணுக்காய் பிரிவில் உள்வீதிகள் புனரமைத்தல் ஆகியவையும் இந்த திட்டத்தின் கீழ் அடங்குமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## உற்பத்தி முயற்சிகளுக்கு கடன் வழங்கும் திட்டம்

(கொழும்பு)

விவசாய உற்பத்திகளிலும், உள்நாட்டு வளங்களை உபயோகித்து ஆரம்பிக்கப்படும் புதிய தொழில் துறைகளுக்கு, புதிய கடன் வழங்கும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கடன் திட்டம் அரச வங்கிகளின் ஊடாக மத்திய வங்கி வழங்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த திட்டத்தின் கீழ் முதலீட்டாளர் ஒருவருக்கு 2 கோடி 50 லட்சம் வரையில் வழங்கப்படும் என மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே, அரிசியில் இருந்து அரிசி மா உற்பத்தி, பால் உற்பத்தி, கால்நடைப் பண்ணை போன்றவற்றை ஆரம்பிப்பது உட்பட மேலும் பல துறைகளுக்கான கோரிக்கைகள் விடுக்கப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலக விஷயங்களிலும் பிறர்காரியங்களிலும் மனதை விடக்கூடாது. பிறர் எவ்வளவு கெட்டிக்காரர்களாக இருந்தாலும் அவர்களிடத்தில் துவேஷம் வைக்கலாகாது
- ஸ்ரீரமணர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## பரிகாரம் என்ன?

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரச் சாரம் சூடுபிடிக்கத் தொடங்குமுன், தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாக பிரதான அரசியல் கட்சிகளின் தலை மைப்பீடங்கள் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீவிர ஆலோசனை நடாத்திவருகின்றன.

இந்த ஆலோசனையின் பெறுபேறாக என்ன நடக் கும் என்றும் இங்கு நாம் பிரஸ்தாபிக்க முன்வர வில்லை. எனினும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடையே புரிந்துணர்வின் அடிப் படையில் இணக்கப்பாடு ஏற்படக்கூடும்.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் அக் கட்சிகள் உச்சநீதிமன்றத்தின் உதவியை நாடப் போவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட அரசியல் கட்சி களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் (யாழ். மாவட்டம் உட்பட) 36 வேட்புமனுக் களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 7 வேட்புமனுக் களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் 4 வேட்பு மனுக்களும், ஜே.வி.பியின் 2 வேட்புமனுக்களும், சுயேட்சைக் குழுக்களின் 302 வேட்புமனுக்களும், சிறுசிறு தவறுகளுக்காக நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளரை சம் பந்தப்பட்ட தரப்பினர் சந்தித்துக் கலந்துரையாடு வதற்கு முயற்சி செய்து வருவதாகத் தெரிகிறது.

இச்சந்திப்புக்கு தேர்தல் சட்டவிதிகள் இடங் கொடுக்குமா என்பது ஒருபுறம் இருக்க, தனது அறிவிப்பை மீள்பரிசீலனை செய்வதற்கும், ரத்துச் செய்வதற்கும் சட்டத்தில் இடமிருப்பதாகவும் தெரிய வில்லை.

தொழில்நுட்பக் கோளாறினாலும் மொழிபெயர்ப் புக்களினாலும் ஏற்பட்ட சிறு தவறுகளுக்கு நீதிமன்ற உதவியை நாடுவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி மூலம் உரையாடி யுள்ளார்.

வேட்புமனுக்களை ஆணையாளர் நிராகரிக்கும் போது அவர் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்து செயற்பட்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

நிராகரிக்கப்பட்ட கட்சிகளில் சட்டத்துறை வல்லு நர்கள் தாராளமாக உள்ளனர். இவர்கள் தமது சட்ட நுணுக்கங்களைப் பாவித்து சட்டங்களிலுள்ள ஓட்டைகளை புட்டுக்காட்டுவார்களானால் சம்பந் தப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு அது பெரும் வாய்ப் பாக அமையக்கூடும்.

நீதிமன்றம் தனது கடமையைச் சரிவரச் செய்யும் போது நீதிக்குத் தலைவணங்கவேண்டியது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாக இருக்கவேண்டும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இது ஒருபுறம் இருக்க, தேர்தல் பிரசாரங்களை எந்தவொரு அரசியல் கட்சியும் ஆரம்பிக்காத நிலை யிலும் 'கூட்டுக்குள்' முளைவிடும் சர்ச்சைகளை மூடிமறைத்து இராணுவக் கட்டுப்பாட்டில் குடாநாடு இருப்பதால் வேட்பாளர்கள் மத்தியில் அச்சம் நிலவு வதாக அறிக்கைகள் வெளியிடுபவர்கள் பற்றி தற் போதைய சூழ்நிலையில் அலட்டிக்கொள்ள எவரும் தயாராக இல்லை.

'தனக்கு மூக்குப்போனாலும் பரவாயில்லை. எதி ரிக்கு சகுனப்பிழை ஆகவேண்டும்' என்ற போக்கு டையவர்களை மக்கள் இனங்காணவேண்டும். நிச்சயம் இனங்காண்பார்கள் என்பது திண்ணம்.

- ஆசிரியர் -

# போக்குவரத்துச் சபை பேருந்துகளில் அறிமுகமாகிறது இலத்திரனியல் "ரிக்கற்"

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச்சபைப் பேருந்துகளில், பயணச்சீட்டுகளை வழங்குவதற்கு இலத்திரனியல் இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளதாகப் போக்கு வரத்துச்சபையின் தலைவர் எம்.ஜி.பந்துசேன தெரி வித்தார்.

விரைவானதும், இலகுவானதுமான சேவைகளைப் பயணிகளுக்கு வழங்கும் நோக்கிலேயே இந்தத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. நெருக்கடியான போக்குவரத்துச் சேவை நடைபெறும் இடங்களி லேயே முதலில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.

இதன்படி நுகேகொட, மகரகம, கிரிபத்கொட, பேலியகொட, பத்தரமுல்லை, கொள்ளுப்பிட்டி, பம் பலப்பிட்டி, தெகிவளை, மற்றும் மவுண்ட்லவன்யா ஆகிய போக்குவரத்துச் சேவையில் இது அறிமுகப் படுத்தப்படும்.

இந்தப் பயணச்சிட்டை வழங்கப்படுவது தொடர் பாக உதகமுல்ல டிப்போவில் வைத்து பேருந்து நடத் துனர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் நடத்துநர்களுக்கான வேலைப்பளு குறைவதுடன், பயணிகளும், பயணச்சிட்டையைப் பெறுவதற்கு நீண்டநேரம் காத்திருக்கத் தேவை யில்லை. அத்துடன் மோசடிகளும் தவிர்க்கப்படும்.

இந்த இலத்திரனியல் பயணச்சிட்டையில், பேருந்தின் இலக்கம், பயணிக்கும் தூரம், பயணி பேருந் தில் ஏறிய நேரம் என்பன சரியாகப் பதிவு செய்யப் பட்டிருக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பதிவுத்தபால் தாமதத்தைக் குறைக்க திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன

(கொழும்பு)

பதிவுத் தபாலில் ஏற்படும் தாமதத்தைக் குறைப் பதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ள தாகத் தபால்மா அதிபர் எம்.கே.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

"தேசியத்திற்கு மகுடம்" விசேட கண்காட்சியை முன்னிட்டு இந்த விசேடசெயற்திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பதிவுத்தபால் விபரங்கள் பற்றிய விபரங்கள் ஒவ்வொரு தபால் நிலையங்களிலும் குறிப்பிடப்படு கின்றமையால் அதனை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மார்க்கோட் முறைமை மற்றும் நவீன தொலைத் தொடர்பு வசதிகளை இந்தத் திட்டத்திற்காக பயன்படுத் தவும் தபால் திணைக்களம் உத்தேசித்துள்ளது.

இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ள மென்பொருளை மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் உருவாக்கி யுள்ளதாகவும் தபால்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

## பதிவு செய்த சிறுவர் இல்லங்கள் தரப்படுத்தப்பட்டு வருகின்றன

(கொழும்பு)

சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவை கள் திணைக்களம் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து சிறுவர் இல்லங்களையும் தரப்படுத்தி வருவதாக திணைக்கள ஆணையாளர் டி.எம்.எஸ் அபயகுண வர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்-

இலங்கையின் அனைத்து மாகாணங்களிலுமுள்ள இச்சிறுவர் நிலையங்களும் ஏ.பி.சி.டி ஆகிய தரங்க ளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேசிய திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு இத் தரமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் ஏ,பி தரங்களை பெற்ற சிறுவர் இல்லங்கள் மிகவும் சிறப் பாக இயங்கிவருவதாகவும் சீ,டி தரங்களைப் பெற்ற சிறுவர் இல்லங்கள் மேலும் முன்னேற வேண்டிய நிலையில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் முல்லை அலுவலகம் மீள்புனரமைப்பு

(வடமராட்சி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வீதி அபிவிருத் தித் திணைக்கள அலுவலகம் மீளப் புனர மைப்பு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

கடந்த கால யுத்தத்தினால் இவ் அலுவலகக் கட்டடம் சேதமடைந்து அலுவலக செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது என்றும், தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையை அடுத்து வடக்கின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இவ் அலுவ லகக் கட்டிடம் மீளவும் புனரமைப்புச் செய்யப்பட வுள்ளது.

2கோடி ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப் படவுள்ள இத்திணைக்கள அலுவலகம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கென செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (100)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிக்காக துப்புரவாக்கப்படும் மைதானங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான ஆரம்ப கட்டப் பணிகள் முழுமூச்சில் இடம்பெற்று வருகின்றன.

கடந்தகாலப் போரினையடுத்து பாடசாலை மைதா னங்கள் காடுகள் போலக் காட்சியளித்து வருகின்றன. எனவே அவற்றைத் துப்புரவு செய்து இல்ல மெய்வல் லுநர் போட்டிகளை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாண வர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் புதர் மண்டியி ருக்கும் மைதானங்களைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு மைதானங்கள் துப்புரவு செய்யப்பட்டதும் இலல மெய்வல்லுநர் போட்டிகள் ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## கிராமசேவையாளரின் நடவடிக்கையால் சட்டவிரோத செயற்பாடுகள் கட்டுப்பாடு

(கரணவாய்)

கப்புது J/382 கிராமசேவையாளரின் துரித நட வடிக்கையினால் இக்கிராமத்தில் இடம்பெறும் சட்ட விரோதச் செயற்பாடுகள் தடுக்கப்பட்டு கட்டுப் பாட்டிற் குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதி கிராமசேவையாளரின் துரித சேவை யினால் கப்புது கிராமத்தில் தொடர்ச்சியான சட்டவிரோ தமான முறையில் இடம்பெற்றுவந்த வயல்களில் கல், மண் அகழ்வு ஊரி ஏற்றுதல் போன்ற செயற்பாடுகள் தடுக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்ட கிராமசேவையாளரைத் தாம் பாராட்டுவதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (18)

## நிதிப்பற்றாக்குறை காரணமாக சிறுவர்களை பராமரிப்பதில் சிரமம்

(கொழும்பு)

நிதிப்பற்றாக்குறை காரணமாகத் தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபையின் பொறுப்பிலுள்ள சிறுவர்களைப் பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸநாயக்க தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

சிறுவர் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு எமது சபை பாரிய நிதிநெருக்கடிகளை எதிர்நோக்கியுள் ளது. இதன் காரணமாகச் சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களைப் பராமரிப்பதற்காக தொடர்ந்தும் மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்காக நிதிஉதவிகளைச் செய்யவிரும்புவோர் 1929 என்ற சிறுவர் உதவித்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி அதுபற்றிய தகவல்களைப் பெற் றுக்கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வேட்புமனு பூர்த்தி செய்யத் தெரியாதோர் சவால் விடுக்கின்றனர் என்கிறார் சஜித்

(கொழும்பு)

வேட்பு மனுக்களைச் சரியான முறையில் பூர்த்தி செய்ய முடியாத நபர்கள் தமக்குச் சவால் விடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இவ்வாறானவர்கள் தம்மை விமர்சனம் செய்வது நகைப்புக்குரியதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிங்கள மொழியைச் சரியான முறையில் எழுதத் தெரியாத கார ணத்தினால் ஹோமகம பிரதேச சபை வேட்புமனு நிரா கரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமக்குச் சவால் விடுப்பதற்கு முன்னர் மொழியை சரியாகக் கற்றுக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தி யுள்ளார். கட்சியை மேலும் பின்னிலைக்குத் தள்ள சிலர் சூழ்ச்சி செய்து வருதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தேர்தலில் கட்சியை வலுப்படுத்தி வெற்றியீட்டச் செய்வதே தமது நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

# நீர்வள நிபுணர்களின் ஆய்விற்கு அமையவே

# குடாநாட்டிற்கான இரணைமடு நீர் விநியோகம்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்

(கிளிநொச்சி)


**சர்வதேச நீர்வள ஆய்வு நிபுணர்களின் ஆய்வுக்கு அமைபவே இரணைமடுக் குளநீர் யாழ். மாவட்டத்திற்கு விநியோகம் செய்யப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் சர்வதேச நீர்வள ஆய்வு நிபுணர்களின் ஆய்விற்கு அமையவே நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எனவே, இந்தத் திட்டத்தினால் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படமாட்டாது.

யாழ். மாவட்டத்திற்கு இரணைமடுக்குளத்திலிருந்து நீர் விநியோகம் செய்வது குறித்து கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் அச்சப்படத் தேவையில்லை. ஏனெனில் மாவட்டத்தின் விவசாயத் தேவைக்கு மேலதிகமாக இருக்கும் நீரே விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன் இந்த நீர் விநியோகத் திட்டத்தை அடுத்து இரணைமடுக்குளம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. குளத்தின் அணைக்கட்டு உயர்த்தப்படவுள்ளது.



இதனால் மாவட்டத்தின் விவசாயத்திற்குத் தேவையான நீர் போதியளவில் கிடைக்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

## செப்பனிடப்பட்டுவரும் யாழ்.- பண்ணை வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணை வீதியில், மண்டைதீவு சந்தி வரையுமான குன்றும் குழியுமான பகுதிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையினரினால் செப்பனிடப்பட்டு வருகின்றது.

கடந்த மழையின்போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த இவ்வீதியால் பயணிகள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர் தற்சமயம் கற்கள் இடப்பட்டு தார் ஊற்றி செப்பனிடப்பட்டு வருகின்றமையால் பயணிகளின் போக்குவரத்தில் இருந்த சிரமங்கள் நீங்குமென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்வீதியின் முழுமையான புனரமைப்பு வேலைகள் தற்சமயம் பிரதான சங்கிலிப்பாலத்தையும் தாண்டி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்புனரமைப்பு வேலைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## படையினரின் ஏற்பாட்டில் நடந்த தைப்பொங்கல் சங்கீத இரவு



(மல்லாவி)

புதுவருடம் மற்றும் தைப்பொங்கலை முன்னிட்டு, இராணுவத்தின் 65ஆவது படைப்பிரிவினரால் கடந்த ஜனவரி 23ஆம் திகதி மல்லாவிப் பிரதேசத்தில் பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு தைப்பொங்கல் சங்கீத இரவு எனப் பெயர் சூடப்பட்டிருந்தது.

அப் பிரதேசத்தைச் சேர்ந்த, இசையில் மிகுந்த ஆர்வம் கொண்டோர் இராணுவத்தினருடன் இணைந்து மேற்கொண்ட முயற்சியால் இவ் இசை நிகழ்ச்சி மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. இம் மாபெரும் இசை விழாவிற்கு சுமார் 2000க்கு மேற்பட்டோர் மல்லாவி நகரத்தில் கூடியிருந்தனர்.

30 வருட காலமாக நிலவியிருந்த பயங்கரவாத செயற்பாடுகளின் பின், இங்கு வாழும் மக்கள் ஒரு போதும் கண்டுகழிக்காதவாறு அமைந்த இவ் இசை விழா நள்ளிரவு வரை இடம்பெற்றது.

இத் தைப்பொங்கல் சங்கீத இரவில், இப் பிரதேசத்தைச் சேர்ந்த நடனக் குழுவினரும், தமது திறமைகளை திறந்த மேடையில் வெளிப்படுத்தினர்.

இவ் இசை விழாவானது பொது மக்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான தொடர்பை மேலும் வலுப்படுத்த உறுதுணையாக அமையும் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

## கிராம மீள் எழுச்சித் திட்டத்தில் இலகு கடன் கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கிராம மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவரும், இலகு கடன் கொடுப்பனவு இன்றைய தினம் ஜெயந்திநகர் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட மீள் குடியேறிய மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இன்று காலை பத்து மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு, இந்தக் கொடுப்பனவுகளைத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கவுள்ளார்.

கடந்த கால யுத்த நடவடிக்கை காரணமாக, குடும்பத் தலைவர்களை இழந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களுக்கே இந்த இலகு கடன் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 12 இலட்சம் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னரும் இந்தக் கிராம சேவகர் பிரிவில் வறிய நிலையிலுள்ள 54 குடும்பங்களுக்கு ஒன்பது இலட்சம் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த இலகு கடன் கொடுப்பனவு மூலம் உதவிகளைப் பெறும் குடும்பங்கள், தமது வாழ்வாரத்தை மேம்படுத்த முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (28)

## மீள்குடியேறிய மீனவக் குடும்பங்கள் தொழில் இன்மையால் பெரும் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் எட்டு மாதங்களுக்கு முன்னர் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறியுள்ள கரைச்சி வடக்குப் பிரதேச மீனவர்கள் மீன்பிடித் தடையாலும் போதிய உதவிகள் கிடைக்காமலும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மீளக்குடியேறியுள்ள இந்த மக்களின் தொழில் வாய்ப்புக்குத் தேவையான உதவிகள் சரியான முறையில் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

தவிர தடை செய்யப்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற இந்த மக்களின் கைவிடப்பட்ட படகுகளைச் சென்று எடுப்பதற்குரிய சரியான நடைமுறைகளும் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு தொகுதி மீனவர்களுக்கு மாத்திரம் சிறு கடலில் தொழில் செய்வதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கரைச்சி வடக்குப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் இளையதம்பி கணேசபிள்ளை தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டையும் பிரதான நிலப் பகுதியையும் பிரிக்கின்ற யாழ். கடலேரியில், ஆனையிறவிலிருந்து கிழக்குப் புறமாக சுண்டிக்குளம் வரையிலான சுமார் 38 கிலோ மீற்றர் நீளமான கடலேரியிலேயே இந்த மீனவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்து வந்தனர். ஆனால், இந்தப் பிரதேசத்தில் இன்னும் கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படவில்லை என இராணுவம் கூறுகிறது.

இந்நிலையில் குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமே தாம் ஏரிக்குள் சென்று மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதாக மீனவர்கள் கூறுகின்றனர். கடலுடன் ஆனையிறவு கடலேரி கலக்கின்ற சுண்டிகுளம் முகத்துவாரத்திற்கு அப்பால் உள்ள கடல் பகுதிகளுக்கு இந்த மீனவர்கள் சென்று மீன்பிடிப்பதென்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் கணேசபிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

## நிர்வாக சபைக்கூட்டம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலைய சமாசத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் மூன்றாம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு வளர்மதி சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சனசமூக நிலைய சமாச நிர்வாக சபை உறுப்பினர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு சமாச செயலாளர் அறிவித்துள்ளார். (18)

## கட்டடப் பணி துரிதம்

இருபத்தைந்து இலட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டட வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கட்டட நிர்மாண வேலைகள் முடிவடைந்ததும் விரைவில் திறந்து வைக்கப்படுமென சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.







**சாவகச்சேரி நீதிமன்றக் கட்டட வேலைகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் ஜனாதிபதியின் சட்டத்தரணியும் சட்டத் தரணிகள் சங்கத் தலைவருமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் சமயக் கிரியைகளில் பங்குபற்றுவதையும், சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபைக் குரு செல்வநாயகம் அடிகள் அத்திவாரக்கிடங்கினை வெட்டி ஆரம்பித்து வைப்பதையும், மாவட்ட நீதிபதி மா. கணேசராசா உரையாற்றுவதையும் அருகில் தலைமை தாங்கிய நீதிமன்றப் பதிவாளர் செல்வி மீரா கந்தசாமி உட்பட நீதிமன்ற உத்தியோகத்தர்களையும் காணலாம்.** (11)

# நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் பெரிய மடுவில் விளையாட்டுப்போட்டி



(மன்னார்)

கடந்த யுத்தத்தின் போது மக்கள் இடம் பெயர்ந்த நிலையில் தற்போது அரசால் மீண்டும் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பெரிய மடு கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் நீண்ட இடைவெளிக்குப்பின்னர் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு விளையாட்டுப்போட்டி மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது.

மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பெரியமடு தட்சணாமருதமடு அ.த.க பாடசாலையின் 2011 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு விளையாட்டுப் போட்டியின் இறுதி மைதான நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் 29.01.2011 காலை 11 மணியளவில் பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் அதிபரின் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது விளையாட்டுப்போட்டிக்கு பிரதம விருந்தினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம், சிறப்பு விருந்தினராக மடு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். எஸ்.செபஸ்ரியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

# சின்னவெங்காயச் செய்கையில் குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம்

(நல்லூர்)

யாழ். குடாநாட்டில் சின்ன வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

வலிகாமம் மேற்கு, கிழக்கு மற்றும் தென்மேற்குப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் இந்த வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வெங்காயத்தின் விலை அதிகரிப்பை அடுத்தே விவசாயிகள் வெங்காயச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாகச் சந்தைகளில் ஒரு கிலோ வெங்காயம் 200 ரூபா முதல் 280 ரூபா வரை தரத்திற்கு ஏற்ப விற்கப் படுகின்றது.

இந்த விலை அதிகரிப்பினால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே சமயம் விதை வெங்காயமே அந்தர் 12 ஆயிரம் ரூபா முதல் 13 ஆயிரம் வரை விற்கப் படுகின்றது.

இந்த விலையைக் கொடுத்து விதை வெங்காயத்தை வாங்கிச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் பலர் பின்னடித்தும் வருகின்றனர். (25)

# நிவாரணத்திற்கு நிதிதிரட்டல்


(கரணவாய்)

ஜே-350 கரணவாய், ஜே-348 கரணவாய் தெற்கு ஆகிய கிராம சேவையாளர்கள் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஒருதொகைப் பணத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவென வழங்கியுள்ளனர்.

இக்கிராம சேவையாளர்கள் அவ்வக் கிராம மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 2 லட்சம் ரூபா நிதியைக் கரவெட்டிப் பிரதேச செயலரிடம் யைளித்துள்ளனர்.

இதைவிட ஜே-382 கப்பூது கிராம சேவையாளரும் தமது கிராம மக்களிடம் சேகரிக்கப்பட்ட 32 ஆயிரத்து 200 ரூபா நிதியைக் கரவெட்டிப் பிரதேச செயலரிடம் ஒப்படைத்துள்ளனர். (18)





இந்தியாவிலிருந்து வருகை தந்த போல் தினகரன் அவர்களின் பிரார்த்தனைத் திருவிழா நேற்றுமுன்தினமும் நேற்றும் யாழ். முற்றவெளி மைதானத்தில் இடம்பெறுவதையும் இதில் கலந்துகொண்ட மக்களையும் காணலாம்.

# சீரான வடிகால் இல்லாமையால் சேதமடையும் வெள்ளவாய்க்கால்

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட வெள்ளவாய்க்கால் வீதி சீரான வடிகால் இல்லாததால் சேதமடைந்து வருவதாகவும், இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாதநிலை ஏற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி சில வருடங்களுக்கு முன்னர் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட போதிலும், வடிகால் சீரின்மையால் வீதி சேதமடைந்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, ஓடக்கரை வீதியிலும் பல வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட வடிகால்களும் தற்போது சேதமடைந்து வருவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, முற்றாகச் சேதமடைவதற்கு முன்னர் சம்பந்தப்பட்டவர்கள் இவ் வடிகால்களைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

# நூறு வீடுகளை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்லாறு கால் ஏக்கர் திட்டத்தில் மக்களுக்கான 100 வீடுகளை அமைப்பதற்கு சம்பிரதாயபூர்வமாக அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின்கீழ் காணிகள் அற்றோருக்காக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் கால் ஏக்கர் என்ற அடிப்படையில் 100 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு, மேற்படி கால் ஏக்கர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கும் வீடுகள் அமைப்பதற்கு யு.என். அபிராட் நிறுவனம் முன வந்துள்ளது.

இதனடிப்படையில் வீடமைக் கும் பணிகளில் முதற் கட்டமாக அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது. இதில் கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத் தியசீலன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

மேலும் அபிராட் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

# மைதானத்தைச் சீர்படுத்துமாறு பாடசாலைச் சமூகம் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு மைதானம் அமைக்கவென வாங்கப்பட்ட புதிய காணியைச் சீர்படுத்தித் தருவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன வர வேண்டுமென பாடசாலை சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்குறித்த கல்லூரிக்கு இது நாள் வரை மைதானம் எதுவும் இல்லாமல் பாடசாலையுடன் கூட உள்ள வெளிப் பகுதியிலேயே விளையாட்டுப் போட்டிகள் உட்பட அனைத்துப் போட்டிகளும் நடத்தப்பட்டு வந்தன.

ஆனால். அந்த இடத்தில் பாடசாலைக்குத் தேவையான கட்டட வசதிகள் தற்போது கட்டப்பட்டு வருவதனால், மைதானம் இல்லாத நிலை காணப்பட்டது. இந்த நிலையில், பாடசாலைக்கு அருகிலுள்ள குருகுலம் பகுதியில் அமைந்துள்ள ஐந்து ஏக்கர் காணி, பாடசாலையின் மைதானத்திற்கு வாங்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது இந்தக் காணியைத் துப்புரவு செய்து அதனை மைதானமாகச் சீர்படுத்தச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவவேண்டுமெனப் பாடசாலைச் சமூகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக தற்போது பாடசாலை மட்டத்தில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், மாணவர்கள் பயிற்சி பெறுவதற்குக்கூட இடமில்லாத நிலை உள்ளதனால், வாங்கப்பட்ட காணியை விரைவாகச் சீர்படுத்தித்தர சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

## இன்றைய பலன்

(31.01.2011 திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
விகிர்தி தை 17
இராகுகாலம் 8.06- 9.36, சுபநேரம் 12.36 -2.06, திரயோதசி,பி.இ. 6.32, மூலம் மு.ப.11.15, சித்தம், கரிநாள், பிரதோஷ விரதம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

மேடம்:- நாள் முழுவதும் அலைச்சல், வேண்டாத தொல்லை, அகாலபோசனம்.

ரிஷபம்:- சாதகமான நிலை, கேட்டவர் உதவி செய்வர், தனகாரிய விருத்தி.

மிதுனம் :- எதிர்பாராத பணவரவு, மேலதிகாரி உதவி, நண்பர் சேர்க்கை.

கடகம்:- அதிக செலவு, உடல்நலக் குறைவு, மனக் குழப்பம்.

சிம்மம்:- பாராட்டப்படல், புதிய முயற்சி, கடன் வசூல்.

கன்னி :- தொழில் விருத்தி, இனசனஉதவி, சுபச்செலவு.

துலாம் :- வீண் பிரச்சினை, வரவுக்குமிஞ்சிய செலவு, பண இழப்பு.

விருச்சிகம்:- அதிதியை விரும்பல, ஆலய தரிசனம், பணச் செலவு.


தனுசு:- உதவிகள் செய்தல், முயற்சியில் அக்கறை, தொழில் இலாபம்.

மகரம்:- தேகநல விருத்தி, ஆடை அணிகலச் சேர்க்கை, பிறர் பாராட்டு.

கும்பம் :- உயர்வான நிலை, மேலாளர் உதவி, நற்செய்தி.

மீனம்:- பாராட்டப்படல், பெண்களால் நன்மை, காரிய சித்தி.

# வேட்பு மனுக்கள் நிராகரிப்பு தொடர்பாக ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சு



(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமது கட்சியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்றுமுன்தினம் தொலைபேசியில் உரையாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஆளுங் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்களில் 34 மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்தும் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீண்டும் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்வதற்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவருடன் தொலைபேசியில் கலந்துரையாடினார் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இரு தரப்பிலும் நிராகரிக்கப்பட்டுள்ள வேட்பு மனுக்கள் தொடர்பாக நீதிமன்றத்தை நாடும் போது பரஸ்பர புரிந்துணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் நடந்து கொள்வது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினார் எனத் தெரியவருகிறது.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதற்கு எவ்வாறான பதிலை வழங்கினார் என்பது தொடர்பில் தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

# அரச மருத்துவமனைகளில் பணியாற்ற 825 மருத்துவ பட்டதாரிகள் நியமனம்

(கொழும்பு)

அரச மருத்துவமனைகளில் கடமையாற்றுவதற்காக 825 மருத்துவப் பட்டதாரிகள் உள்ளகப்பயிற்சி மருத்துவர்களாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதில் 2003, 2004 ஆம் ஆண்டில் உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களில் கற்று பட்டதாரிகளாக வெளியேறியவர்களே இந்தப் பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களில் 55பேர் வடமாகாணத்திலுள்ள மருத்துவமனைகளில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்வின் போது வழங்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார்.

# சட்டவிரோத ஆட்கடத்தல்களை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)


சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உதவிகளை வழங்குமாறு மலேசியாவிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கையர்களை மலேசியாவிற்குள் அழைத்துச் செல்லும் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க உதவிகள் வழங்கப்பட வேண்டுமென மலேசியாவிற்கான இலங்கைப் பிரதி உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உதய பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

அவுஸ்ரேலியா போன்ற மேற்குலக நாடுகளுக்கு இலங்கையர்களை அனுப்பி வைப்பதற்கான மத்திய நிலையமாக மலேசியாவை சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். மேற்குலக நாடுகளுக்கு நபர்களை சட்டவிரோதமாக அனுப்பி வைப்பதற்காக 8000 முதல் 12000 அமெரிக்க டொலர்கள் வரையில் அறவீடு செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மலேசியாவிற்கு செல்வதற்காகவே இலங்கையர்கள் 4000 அமெரிக்க டொலர்களை முற்பணமாகச் செலுத்துவதாகவும் தெரிவித்தார். மலேசியாவில் தொழில்களில் ஈடுபட்டு வரும் இலங்கையர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

# இலங்கையில் தயாரான ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யதிட்டம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தயாரிக்கப்பட்ட இராணுவ தளபாடங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யத் தயாராகவுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

புலிகளுக்கு எதிரான போரில் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு விற்கவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். ஆளில்லாத சிறிய உளவு விமானமும் இவற்றில் அடங்கும். பொது நிகழ்ச்சிகள் கூட்டங்கள் என்பவற்றைக் கண்காணிக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைக்கும் இவ் விமானம் உதவக்கூடியது.

மார்ச் 31 முதல் ஜூன் 2ஆம் திகதி வரை இலங்கையில் இராணுவத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புலிகளைத் தோற்கடித்த அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்கான சர்வதேச மாநாட்டிற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு இந்த இராணுவத் தளபாடங்கள் காட்சிப்படுத்தப்படும் என இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

இராணுவத்தைத் தவிர, கடற்படை, விமானப்படை ஆகியனவும், தாம் தயாரித்த சில ஆயுதங்களைக் காட்சிப்படுத்தவுள்ளன.

# மீனவர்களின் பாதுகாப்பை கடற்படை உறுதிப்படுத்துகிறது

## தளபதி சோமதிலக திஸநாயக்க



(கொழும்பு)

இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அனைத்து மீனவர்களின் பாதுகாப்பையும் கடற்படை உறுதிப்படுத்துவதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைவது நீண்ட காலமாக இடம்பெற்று வருகிறது

எனினும் அவர்களுடைய பாதுகாப்பைக் கடற்படை உறுதிப்படுத்தி வருகிறது.

புலிகளுக்கு எதிரான போரின் போது இந்திய மீனவர்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்தனர். எனினும் அவர்களின் பாதுகாப்பு அன்றைய நிலையிலும் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்திய மீனவர்கள் பல தடவை கடற்பரப்பில் விபத்துக்களுக்கு உள்ளான போதும் இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் காப்பாற்றியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுவரொட்டிகள் ஒட்டுவோரை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

தேர்தல் பிரசார சுவரொட்டிகள் ஒட்டுபவர்கள் கட்சி பேதமின்றிக் கைது செய்யப்படுவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். இது தொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனு ஆரம்பிக்க முன்னரே பல வேட்பாளர்கள் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

வேட்பு மனுத்தாக்கல் முடிவடைந்த நிலையில் அபேட்சகர்களுக்கான விருப்பு இலக்கங்களை வழங்க தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் நாட்களில் கூடுதலான தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் சட்டத்தின் பிரகாரம் சுவரொட்டிகள் ஒட்டுவது சட்டவிரோதமானது என்று தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், அந்தந்த பொலிஸ் நிலையங்களினூடாக சுவரொட்டி ஒட்டுவோரைக் கைது செய்யவுள்ளதாகக் கூறினார்.



நாட்டில் நிலவுகின்ற இயற்கை அனர்த்தங்களைத் தணிப்பதற்கும்,மக்களின் சுபீட்சத்திற்குமாக ஆசிவேண்டி கொழும்பு வந்த இந்தியாவின் பிரம்மரிஷி மலையில் வசிக்கும் அன்னை சித்தர் ஸ்ரீஸ்ரீ ராஜ்குமார் சுவாமிகள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் உரையாற்றுவதையும்,210 சித்தர்களின் யாகபூசையையும் காணலாம்.

# சுயேட்சையாக போட்டியிட ஆளும் கட்சி முயற்சியாம்

(கொழும்பு)

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் சுயேட்சையாகப் போட்டியிடுவதற்கு ஆளும் கட்சியினர் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சுயேட்சைக் குழுக்களில் போட்டியிடும் தரப்பினருக்கு ஆதரவளித்து அவர்களை வெற்றி பெறச் செய்ய ஆளும் கட்சி சிரேஸ்ட உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட தொகுதிகளில் வழக்குத் தொடர்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

நீதிமன்றில் சாதகமான தீர்ப்புக் கிடைக்கப் பெற்றால் நிராகரிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களையும் உலகக் கிண்ணப்போட்டிகளுக்காக ஒத்திவைக்கப்பட்ட திகதியில் நடாத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## மறுபரிசீலனை இல்லை



(புதுடில்லி)

இந்திய-இங்கிலாந்து அணிகள் மோதும் உலகக் கிண்ணப் போட்டியை மாற்றும் முடிவில் மறு பரிசீலனை இல்லை என்று ஐ.சி.சி நிராகரித்தது. காலக்கெடு நீட்டிக்கப்பட்டாலும் பணிகள் முடியாது என்று தெரிவித்தது.

இதற்கிடையே உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா- இங்கிலாந்து அணிகள் இடையேயான ஆட்டத்தை எங்கு நடத்துவது என்பது குறித்து இந்திய கிரிக்கெட் சபை இன்று முடிவு செய்யவுள்ளது.

இதற்கிடையே கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானம் குறித்த விவகாரம் தொடர்பாக ஐ.சி.சி. தலைவரும், மத்திய அமைச்சருமான சரத்பவார் இறுதி முடிவை இன்று எடுக்கிறார். இதை அவரே தெரிவித்தார்.

# யாழ்ப்பாணக் கல்லூரி த்ரில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில், பரபரப்புக்கு மத்தியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் 19 வயதுப் பிரிவு, 'பிரிவு மூன்று'க்கான போட்டியிலேயே யாழ்ப்பாணக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரண்டு நாட்களைக் கொண்ட இந்த இனிங்ஸ் போட்டி கடந்த 28, 29ஆம் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரியலக்ஷன் 51, சிறிகுகன் 46 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரியதர்சன், விமல்ராஜ் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.




பதிலுக்கு முதல் இனிங்சிற்காகக் களமிறங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹரிவதனன் 19 ஓட்டங்களைப் பெறறார். பந்து வீச்சில் பிரியதர்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

123 ஓட்டங்கள் பின்னிலையில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இருந்தமையால் மீண்டும் துடுப்பாடப் பணிக்கப்பட்டது. இதற்கமைய இரண்டாவது இனிங்சிற்காக களமிறங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஜீந்தன் 91 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரியலக்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 68 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி, பெரும் பரபரப்பான கட்டத்தில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்றது. இதில் பிரியலக்ஷன் 17 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஹரிவதனன் மூன்று, பிரியதர்சன், டக்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்)

## ஜோகோவிச் கைப்பற்றினார்



(சிட்னி)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரில் ஆண்களுக்கான ஒற்றையர் பட்டத்தை செர்பியாவின் ஜோகோவிச் கைப்பற்றிக் கொண்டார்.

சிட்னியில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்தின் ஆன்ரி முர்ரே எதிர்கொண்ட ஜோகோவிச் 6-4, 6-2, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

இதுவரை ஆன்ரி முர்ரேயுடன் எட்டு முறை மோதிக் கொண்ட ஜோகோவிச் ஐந்து முறை வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுடன் அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் அனைத்துப் பிரிவு ஆட்டங்களும் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# டோனி தலைமையிலான அணியில் இடம்பெற்றமை பெருமையானது



(மும்பை)

கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக டெஸ்ட் அரங்கில் டோனி தலைமையிலான இந்திய அணி முதலிடத்தில் உள்ளது. இதில், இடம் பெற்றிருப்பது மிகவும் பெருமையாக உள்ளதென சச்சின் , தெரிவித்தார்.

இந்த ஆண்டின் சிறந்த இந்திய வீரர் மற்றும் சிறந்த டெஸ்ட் வீரர் என்ற விருதை, காஸ்டிரால் நிறுவனம் வழங்கியது. இதற்கு முன் கடந்த 2009ல், இதே நிறுவனம் வழங்கிய சிறந்த டெஸ்ட் வீரர் விருதும் பெற்றுள்ளார். இவர் தவிர, டோனி, ஹர்பஜன், டிராவிட், யூசுப் பதான் ஆகியோரும் விருது பெற்றனர்.

விழாவில் பங்கேற்ற சச்சின் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவில் நடந்த டெஸ்ட் போட்டியில், இலங்கை அணியைத் தோற்கடித்து, இந்திய அணி முதல் நிலை டெஸ்ட் அணி என்ற அந்தஸ்தை முதன் முதலாகப் பெற்றது. அப்போது, இது 30 அல்லது 40 நாட்களுக்குத் தான் நீடிக்கும் என்று, பெரும்பாலானவர்கள் கருத்துத் தெரிவித்தனர். அடுத்து வந்த தென்னாபிரிக்க தொடரில் முதல் டெஸ்டில் தோல்வியடைந்தோம். உடனே முதல் நிலை இடம்பறிபோகும் என்றனர். ஆனால், இப்போது ஒரு ஆண்டுக்கும் மேலாக இதே இடத்தில் நீடிக்கிறோம்.

இந்த இடத்தைப் பெறுவது என்பது அவ்வளவு எளிதல்ல. இதற்காக பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளோம். கடினமாக உழைத்துள்ளோம். பயிற்சியாளர் கிறிஸ்டனும் அணியில் வியக்கத்தக்க வகையில் மாற்றம் கொண்டு வந்தார். கடந்த 2007இற்குப் பின் அணியில் உள்ள அனைத்து துடுப்பாட்ட வீரர்களும் சிறப்பாக விளையாடி வருகின்றனர். இத்தகைய அணியில் இருப்பதை மிகவும் பெருமையாக கருதுகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் கிரிக்கெட்டில், நீடிக்க வயது ஒரு தடையே அல்ல. நான் 16 வயதில் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கினேன். இது போல யாரும் எந்த வயதிலும் தொடங்கலாம், எவ்வளவு காலம் வேண்டுமானாலும் விளையாடலாம். ஆனால் எப்படி விளையாடுகின்றோம் என்பது தான் முக்கியம். இந்த உலகக் கிண்ணத் தொடரில் சிலவற்றை நிறைவேற்ற விரும்புகிறேன். அது என்ன என்பது எல்லோருக்கும் தெரியும் என்றார்.

## வெள்ள நிவாரண நிதிக்கு

(கொழும்பு)

இலங்கை மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடரின் வருமானம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதியாக வழங்கப்படும் என இலங்கை கிரிக்கெட் சபை நேற்று தெரிவித்துள்ளது.

இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி இன்று பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது.

இப்போட்டிகளில் வரும வருமானங்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி வழங்க முடிவு செய்துள்ளதாகவும், உலகக் கிண்ணம் போட்டித் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் இரு அணிகளுக்கும் நல்ல பயிற்சிக் களமாக இப்போட்டித் தொடர் அமையும் எனவும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# ஆசியக்கிண்ண கால்பந்தாட்டம் கிண்ணத்தை வென்றது ஜப்பான்



(டோகா)

கட்டார் தலைநகர் டோகாவில் நடைபெற்ற ஆசியக் கிண்ணக் கால்பந்து போட்டியில் ஜப்பான் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இறுதி ஆட்டத்தில் ஜப்பான் 1-0 என்ற கணக்கில் அவுஸ்ரேலிய அணியை வீழ்த்தியது.

இந்த வெற்றியின் மூலம் ஆசியக் கிண்ணப் போட்டியில் அதிக முறை கிண்ணத்தை வென்ற அணி என்ற பெருமையை ஜப்பான் பெற்றது. இதற்கு முன்னதாக 1992, 2000, 2004 ஆகிய ஆண்டுகளில் ஜப்பான் சம்பியன் பட்டம் வென்றுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. பின்னர் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது.

இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திய ஜப்பானின் மாற்று ஆட்டக்காரர் ததானரி லீ, கோல் அடித்து ஜப்பானுக்கு வெற்றித் தேடிக் கொடுத்தார்.

# ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது ஆஸி



(பிறிஸ்பேன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக் கொண்டது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் ஐந்தாவது போட்டி நேற்று பிறிஸ்பேன் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. இப்போட்டியில் 51 ஓட்டங்களால் வெற்றிபெற்றே அவுஸ்ரேலிய அணி தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, 49. 3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 54, ஹடின் 37, மைக்ஹசி 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வோர்க்கர்ஸ் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 250 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 45.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பீற்றர்சன் 40, இயன் பெல் 36, பின் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வட்சன் மூன்று, பிரெட்லீ, பொலிஞ்கர், ஹஸ்ரிங்ஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக வோர்க்கர்ஸ் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் 4-1 என்ற கணக்கில் அவுஸ்ரேலிய அணி தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

இரு அணிகளுக்குமிடையிலான ஆறாவது போட்டி பெப்ரவரி இரண்டாம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுரங்கப்பாதை மீதான தாக்குதலில் பாகிஸ்தானில் எண்மர் உயிரிழப்பு

(பெஷாவர்)

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்தில் உள்ள முக்கியமான சுரங்கப்பாதை மீது வெடிகுண்டுகள் நிரப்பிய லொறியை மோதி தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் நடந்த அடுத்த நிமிடத்தில் சுரங்கப் பாதைக்கு அருகில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடி மீது வெடிகுண்டுகள் நிரப்பிய லொறியை மோதி தாக்குதல் நிகழ்த்தினர்.

இவ்விரு சம்பவங்களிலும் 8 பேர் கொல்லப்பட்டனர். 14 பேர் காயமடைந்தனர். இதில் 4 பேர் படுகாயமடைந்தனர். லேசாக காயம் அடைந்தவர்கள் அனைவரும் சம்பவம் நடந்த இடத்துக்கு அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த நால்வரும் பெஷாவரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் தெற்குப் பிராந்தியத்தையும், பெஷாவர் நகரையும் இணைக்கும் முக்கியமான இந்த சுரங்கப்பாதை ஜப்பான் வல்லுநர்களால் கட்டப்பட்டது. இச்சுரங்கப்பாதைத் வழியாகச் செல்லும் வாகனங்களுக்கு ஏற்கெனவே தீவிரவாதிகள் அச்சுறுத்தல் விடுத்திருந்ததால் அது பல மாதங்களாக மூடிக்கிடந்தது.

சமீபத்தில் பாகிஸ்தானின் தெற்குப் பிராந்தியத்தில் இருந்து பெஷாவர் பகுதிக்குச் செல்லும் மாற்றுப்பாதையில் 24 மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் சுரங்கப்பாதை சமீபத்தில் மீண்டும் திறக்கப்பட்டது. தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருந்ததால் சுரங்கப்பாதையில் பகலில் மட்டும் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் தக்க தருணம் பார்த்துக் காத்திருந்த தீவிரவாதிகள், சுரங்கப்பாதை மீதும், சுரங்கப்பாதைக்கு முன்னதாக பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சோதனைச்சாவடி மீதும் தாக்குதல் நிகழ்த்தியுள்ளனர்.

சுமார் 500 கிலோ வெடிபொருள் நிரப்பிய லொறியை சுரங்கப்பாதையில் மோதி முதலில் தாக்குதல் நடத்தினர். இதில் சுரங்கப்பாதை தர்ந்தது. லொறி மோதும்போது சுரங்கப் பாதைக்குள் சென்று கொண்டிருந்த ஏராளமான வாகனங்களும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவம் நடந்த அடுத்த சில நிமிடங்களில் எண்ணெய் லொறியில் வெடிபொருட்களை நிரப்பி, அருகில் இருந்த சோதனைச்சாவடி மீது தாக்குதல் நடத்தினர். ஆனால் தாக்குதல் நடந்தபோது சோதனைச்சாவடியிலிருந்து சற்று தூரத்தில் பாதுகாப்பு வீரர்கள் நின்று கொண்டிருந்தனர். இதனால் அவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்.

ஆனால் இத்தாக்குதலில் சோதனைச்சாவடிக்கு அருகில் நின்று கொண்டிருந்த வாகனம் வெடித்துச் சிதறியது. இத்தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. அப்பகுதி முழுவதிலும் பாதுகாப்புப் படைவீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளை வலைவீசித் தேடி வருகின்றனர். தாக்குதல் நடந்ததும் சுரங்கப்பாதையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.




# ஆளுநராக போட்டியிட இருந்தவர் நைஜீரியாவில் சுட்டுப் படுகொலை

(போர்னோ)

நைஜீரியாவில் கவர்னர் பதவி வேட்பாளர் உள்பட 7 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள நைஜீரியா நாட்டின் போர்னோ மாகாணத்தில் கவர்னர் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து நைஜீரியா மக்கள் கட்சி வேட்பாளராக மோது பனாமி குபியோ போட்டியிட்டார். நேற்று அவர் போர்னோ மாகாணத்தின் தலைநகரான மைதுகுரியில் வடக்கு ஷேகுரியில் உள்ள தனது தந்தையை பார்க்க சென்றார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் 5 பேர் அவரை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் குண்டு பாய்ந்த அவர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தார். மர்ம நபர்களை நோக்கி குபியோவின் பாதுகாவலர்கள் திருப்பி சுட்டனர். இருந்தும் அவர்கள் அங்கிருந்து தப்பி விட்டனர்.

இதற்கிடையே, மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டதில் குபியோவுடன் வந்த அவரது ஆதரவாளர்கள் 6 பேர் மீதும் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்தன. அதில், 4 பேர் அதே இடத்தில் பலியாகினர். படுகாயம் அடைந்த 2 பேரை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவர்கள் பரிதாபமாக இறந்தனர்.

இதனால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்தது. இச்சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# ஆப்கானின் கந்தகார் பிரதி ஆளுநர் தற்கொலைத் தாக்குதலில் பலியானர்



ஆப்கானில் தென்பகுதி மாகாணமான கந்தகாரின் பிரதி ஆளுநர் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்துல் லத்தீப் அஸ்னன் என்பவரே கொல்லப்பட்டவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

கந்தகாருக்குத் தனது கடமை நிமித்தம் பிரதி ஆளுநர் ட்ரக்கில் பயணம் மேற்கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைதாரி, ட்ரக்குடன் மோதி வெடித்ததாக ஆளுநரின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் ஆளுநரின் மூன்று மெய்ப்பாதுகாவலர்களும் படுகாயமடைந்தனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் கந்தகாருக்குச் சென்ற அமெரிக்கத் தூதுவர் ஹரிஎய்கென் பெறி இந்தத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்த மாகாணத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும் அவர் ஊடகவியலாளரிடம் தெரிவித்தார்.

# ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஜேர்மனியில் 10 பேர் பலி, பலர் காயம்



(பெர்லின்)

ஜேர்மனியில் பயணிகள் ரயில் மீது சரக்கு ரயில் மோதியதில் பத்துப்பேர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜெர்மனியில் உள்ள மாக்டெபர்க் நகரில் இருந்து ஹால்பெர்ஸ்டேட் நகருக்கு பயணிகள் ரெயில் புறப்பட்டு சென்றது. கிழக்கு ஜெர்மனியில் உள்ள சல்சோனிக்கும் அன்ஹால்ட் நகருக்கும் இடையே சென்ற போது இதன் மீது சரக்கு ரெயில் பயங்கரமாக மோதியது. இதை தொடர்ந்து ரெயில் பெட்டிகள் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகின. இதில் 10 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர்.தகவல் அறிந்ததும்

தீயணைப்பு படையினரும், போலீசாரும் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.


காயம் அடைந்தவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை அளித்தனர். இந்த விபத்து காரணமாக அப்பகுதியில் ரெயில் போக்குவரத்து தடைபட்டது.

# சட்டவிரோதமாக பிடித்துவைக்கப்பட்டுள்ள தூதரக அதிகாரியை விடுவிக்க கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சட்டவிரோதமாக பிடித்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரியை உடனே விடுவிக்க வேண்டும் என, அதிபர் ஒபாமா நிர்வாகம் கோரியுள்ளது.

அதேநேரத்தில், அமெரிக்க தூதரக அதிகாரி தொடர்பான வழக்கை கவனமாகக் கையாளுமபடி, பாக்., உள்துறை அமைச்சரை அந்நாட்டின் ராணுவ தளபதி கயானி கேட்டுக் கொணடுள்ளார். பாகிஸ்தான் லாகூரில் உள்ள அமெரிக்க துணை தூதரகத்தில் பணியாற்றுபவர் ரேமண்ட் டேவிட். இவர் சமீபத்தில் தன் வாகனத்தில் தூதரக உயரதிகாரிகள் இருவருடன் லாகூர் அருகே சென்று கொண்டிருந்தார். அப்போது, அவரை வழிமறித்த மூன்று பேர், துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்க முயன்றனர். டேவிட் தன் கைத் துப்பாக்கியால் அவர்களை நோக்கிச் சரமாரியாகச் சுட்டார். இதில், இரு கொள்ளையர்கள் சம்பவ இடத்திலேயே இறந்தனர். உடன் டேவிட் சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடினார். அதே நேரத்தில், அவருடன் ஏற்கனவே காரில் வந்த தூதரக அதிகாரிகள் இருவர், அவரை காரில் பின் தொடர்ந்தனர். அப்போது நிகழ்ந்த சாலை விபத்தில், மற்றொரு பாகிஸ்தானி பலியானார். இதையடுத்து, டேவிட்டை பிடித்து பாகிஸ்தான் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.




இந்நிலையில், பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க தூரதகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், சட்டவரோதமாகப் பிடித்து வைத்துள்ள அமெரக்க தூதரக அதிகாரியை, பாகிஸ்தான் நிர்வாகத்தினர் விடுவிக்க வேண்டும். தூதரக அதிகாரியைக் கைது செய்வதும், காவலில் வைப்பதும் சர்வதேச வதிமுறைகள் மற்றும் வியன்னா மாநாட்டுத் தீர்மானத்திற்கு எதிரானது. கிரிமினல் பின்னணி கொண்ட சிலர், டேவிட்டிடம் கொள்ளையடிக்க முயன்றதால் தான் அவர்கள் சுடப்பட்டுள்ளனர எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுபோதை சாரதியை காட்டிக்கொடுக்கும் கார்

தற்போது மது அருந்திவிட்டு குடிபோதையில் வாகனங்கள் ஓட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. இதனால் விபத்துகள் அதிகரித்து பலரின் உயிர்கள் பறிபோகின்றன. அதைத் தடுக்கும் வகையில் புதிய வகை சூப்பர் கார் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கார் குடிபோதையில் இருக்கும் சாரதியைக் கண்டு பிடித்துத் தருகிறது. இந்த அதிநவீன காரில் மனித உடலின் உணர்வுகளைப் பதிவு செய்யக் கூடிய கருவி பொருத்தப்பட்டுள்ளது. சாரதியின் மூச்சுக் காற்று, அல்லது தோல் பகுதியின் உணர்வு மூலம் சாரதி குடிபோதையில் இருக்கிறாரா என்பதைக் கண்டறிய முடியும்.

இது தவிர காரின் சக்கரங்களை இயக்கக் கூடிய ஸ்டீயரிங் மற்றும் கதவுப் பூட்டுகளிலும் பொருத்தலாம். அதன் மூலம் சாரதியின் ரத்தத்தில் கலந்து இருக்கும் அற்கஹோலின் விகிதத்தை கண்டறிந்து அவர் போதையில் உள்ளாரா எனக் கண்டறிய முடியும்.

குடிபோதையில் இருப்பது தெரிந்தால் காரை ஓட்ட அந்த சாரதியை அனுமதிக்காமல் வேறு ஒருவரை ஓட்டச் செய்யலாம். இந்தக் காரன் வெளளோட்டச் சோதனை நடந்தது. அமெரிக் காவில் உள்ள வால்கம் நகரில் நடந்த இந்தச் சோதனை ஓட்டத்தை அமெரிக்க போக்குவரத்து செயலாளர் ராய் லாகூட் நேரில் வந்து பார்த்தார்.

இக்காரைத் தயாரித்த நிபுணர்களை அவர் வெகுவாகப் பாராட்டினார். இந்தப் புதிய முயற்சிக்கு மக்களிடையே வரவேற்பும் பாராட்டும் கிடைத்துள்ளது. இது போன்ற காரை புழக்கத்தில் விடவேண்டும். இதன் மூலம் பல உயிர்கள் காப்பாற்றப்படும் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கைக்கான நிருபமாவின் விஜயம் கண்துடைப்பு என்கிறது பாரதிய ஜனதா



(சென்னை)

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதென கொழும்பு செல்லும் இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவின் பயணம் வெறும் கண்துடைப்பென அகில இந்திய பாரதிய ஜனதாத் தலைவர் நிதின்கட்காரி தெரிவித்தார்.

நேற்றையதினம் சென்னையில் நிருபர்களுக்குப் பேட்டியளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது-

தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்படுவதை பா.ஜனதா வன்மையாகக் கண்டிக்கிறது. இதுவரை 500 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படை தாக்குதலுக்குப் பலியாகி இருப்பது வேதனை அளிக்கிறது. இந்திய எல்லையில் மீனவர்கள் மீன்பிடித்தாலும் இலங்கைக் கடற்படை தாக்குவது வேதனை அளிக்கிறது. நடுக்கடலில் இதுதான் இந்த நாட்டு எல்லை என்பதை மீனவர்களால் கண்டுபிடிக்க முடியாது.

இலங்கைக் கடற்படைத் தாக்குதலால் மீனவர்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. மீனவர்களைப் பாதுகாகக நடவடிக்கை எடுக்காத மத்திய, மாநில அரசுகள் மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். கடந்த 15 நாட்களில் 2 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதை பாரதீய ஜனதாக் கட்சி சும்மாவிடாது. இது தொடர்பாக பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவோம். மத்தியில் பா.ஜனதா ஆட்சியில் இருந்த போது சீனா, நேபாளம் போன்ற அண்டை நாடுகளுடன் நட்புறவு கொண்டு வலுவாக இருந்தோம். ஆனால் தற்போதைய மத்திய அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையால் அண்டை நாடுகளுடன் நட்புறவு இல்லை.

இலங்கையில் தமிழர்கள் பல இன்னல்களைச் சந்தித்து வருகிறார்கள். அவர்கள் மட்டுமின்றி தமிழக மீனவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். பாகிஸ்தான்-இந்தியா இடையே நட்புறவு சற்றுப் பலவீனமாக இருந்தாலும் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது இரு நாட்டு கடற்படையும் கைது நடவடிக்கைதான் எடுக்கும். யாரையும் சுட்டுக் கொல்லமாட்டோம். இந்தியாவின் உதவிகளைப் பெற்றுக்கொண்டே இந்தியர்களை, இலங்கை சுட்டுக்கொல்கிறது.

இலங்கைக் கடற்படைச் செயலை யாரும் நியாயப்படுத்த முடியாது. இலங்கையில் நடைபெறும் தமிழர்கள் மீதான தாக்குதல் பற்றியும் உலக மனித உரிமைகள் கழக ஆணையத்தில் புகார் செய்யப்படும் தமிழ் மீனவர்கள் மீது அவர்களுக்கு அக்கறை இல்லை. கண்துடைப்புக்காக நிருபமாராவை இலங்கைக்கு அனுப்புகிறார்கள். இதனால் எந்தவித பயனும் ஏற்படாது.

மத்திய-மாநில அரசுகளின் தவறான கொள்கைகளால் தொழிற்வளர்ச்சியும் வீழ்ச்சி அடைகிறது.

சுவிஸ் வங்கியில் 20 லட்சம் கோடி கறுப்புப் பணம் உள்ளது. அதை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இதை மீட்டு நதிகளை இணைக்கலாம். கிராமங்களை மேம்படுத்தலாம், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலாம் என்றார்.

# ஜெயலலிதாவின் கால அவகாச மனு நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது

(சென்னை)

சொத்துக் குவிப்பு வழக்கில் கால அவகாசம் கோரிய ஜெயலலிதாவின் மனுவை பெங்களூர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டது

தமிழக முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீது தமிழக அரசு சொத்துக் குவிப்பு வழக்கைத் தொடர்ந்தது. இந்த வழக்கு பெங்களூர் நீதி மன்றில் நடந்து வருகிறது.

இந்த வழக்கில் சாட்சியாளர்களிடம் விசாரணை முடிந்தது. இந்த நிலையில்,







44 சாட்சிகளின் ஆங்கில மொழிபெயர்ப்பில உள்ள தவறுகள் திருத்தப்பட்டு இருப்பதாகவும், அதை ஏற்றுக்கொள்ளும்படியும், மீதியுள்ள சாட்சிகளின் மொழிபெயர்ப்பில் உள்ள தவறுகளைத் திருத்த 6 மாத கால அவகாசம் தர வேண்டும் என்று கோரியும் ஜெயலலிதா சார்பில் நீதிமன்றில் 2 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், அதன் மீது நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று அறிவித்து இருந்தது. இந்த நிலையில் பெங்களூர் நீதிமன்றம் நேற்றுக கூடியது. நீதிபதி பி.எம்.மல்லிகார்ஜு னய்யா முன்னிலையில் அரசு சட்டத்தரணி ஆச்சார்யா, சந்தீப் சவுடடா மற்றும் ஜெயலலிதா சார்பில் நவநீதகிருஷ்ணன், அசோகன் ஆகியோர் ஆஜர் ஆனார்கள்.

அப்போது தவறுகளைச் சரிசெய்ய 6 மாத கால அவகாசம் கோரிய ஜெயலலிதாவின் மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார். மொழி பெயர்ப்பில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அதை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

அதே நேரத்தில் மற்றொரு மனு தொடர்பாக, ஜெயலலிதா சார்பில் 44 சாட்சிகளின் மொழிபெயர்ப்பில் தவறுகள் திருத்தப்பட்டதைச் சரிபார்த்து ஒரு வாரத்தில் நீதிமன்றில் வழங்கும்படி மொழிபெயர்ப்பாளர் சட்டத்தரணி ஷாரீசுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# புதிய தொலைத்தொடர்புக் கொள்கை விரைவில் வெளிவருமென அறிவிப்பு



(புதுடில்லி)

அலைக்கற்றை ஒதுக்கீடு தவிர்த்த புதிய தொலைத் தொடர்பு கொள்கை விரைவில் வெளியிடப்படும் என்று மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் கபில் சிபல் கூறினார்.

டில்லியில் செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது-

ஸ்பெக்ட்ரம் அனுமதி வழங்கும்போது நிறுவனங்களுக்கு 4.4 மெகாவாட்ஸ் அலைக்கற்றை அளிக்கப்படும். புதிய கொள்கையின்படி இனி இதற்கு தனியாகக் கட்டணம் செலுத்தவேண்டும். இதன்படி, புதிதாக சேவையளிக்கத் தொடங்கும் நிறுவனங்கள் 2 ஜி அலைக்கற்றையில் 1.8 மெகாவாட்ஸ் கூடுதலாக பெறவேண்டுமெனில் சந்தை நிலவரத்துக்கேற்ப கட்டணம் செலுத்த வேண்டும். ஒருவேளை 6.2 மெகாவாட்ஸ் அளவுக்கு அனுமதி பெற்றுள்ள நிறுவனங்கள் கூடுதல் அலைக்கற்றைக்குக் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். இப்புதிய மாற்றம் உடனடியாக அமுலுக்கு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, புதியகொள்கை ஏற்கெனவே இத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குச் சாதகமாக அமைந்துள்ளது. ஏனெனில் அவற்றிடம் 6.2 மெகாவாட்ஸ் அளவுக்கு அலைக்கற்றை உளளது. ஆனால் புதிதாக சேவையைத் தொடங்கும் நிறுவனங்கள் 1.8 மெகாவாட்ஸ் அலைக்கற்றை கூடுதலாகப் பெற சந்தை நிலவரத்துக்கு ஏற்பக் கட்டணம் செலுத்த வேண்டும். ஏற்கெனவே போட்டி கடுமையாக உள்ள சூழலில் புதிய வாடிக்கையாளர்களைப் பெறுவது மிகவும் சிரமம். இந்நிலையில் கூடுதல் கட்டணம் செலுத்தி சேவையளிப்பது கடினமானது என்று புதிய நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வெளிநாடுகளிலுள்ள கறுப்புப்பணத்தை இந்தியாவிற்குக் கொண்டுவர வேண்டும்

## ராகுல்காந்தி கோரிக்கை

(புதுடில்லி)

வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டு இருக்கும் இந்தியர்களின் கறுப்புப் பணத்தைக் கண்டுபிடித்து திரும்பக்கொண்டு வர இன்னும் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என, ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்திய அரசியல் கட்சிகளில் ஜனநாயகம் இல்லை. கட்சிகளில் ஜனநாயகம் இருந்தால்தான் அது நாட்டுக்கு நல்லதைத் தர முடியும். அரசியல் என்றாலே ஊழல் தான் என்று பொதுமக்கள் நினைக்கிறார்கள். அரசியல் நடைமுறைகள் இப்போது இருப்பது போல தொடர்ந்தால் மக்களிடம் இந்த எண்ணம் தான் மேலோங்கும். எனவே அரசியல் அடிப்படைகளையே மாற்றி அமைத்தால் தான் இதை தடுக்க முடியும் என்னை அடுத்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி பிரதமர் பதவிக்கு முன் நிறுத்தும் என்று நீங்கள் (நிருபர்கள்) சொல்வது உங்களுடைய அனுமானம் நான் அப்படிக் கருதவில்லை. ஆனால் அரசியல் அமைப்பை பழுது பார்க்க வேண்டும் என்பதையே நான் ஒரே குறிக்கோளாக கொண்டுள்ளேன். வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டு இருக்கும் இந்தியர்களின் கறுப்புப் பணத்தைக் கண்டு பிடித்து திரும்பக் கொண்டு வர இன்னும் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் இது இந்தியாவின் பணம், இந்திய மக்களின் பணம் அதை விடக்கூடாது. இந்தப் பணம் திரும்ப வரும் என்ற உத்தரவாதம் வேண்டும். அடிமட்ட அளவில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவே கிராமங்களில் நான் அடிக்கடி சுற்றுப்பயணம் செல்கிறேன். ஏழை மக்களைச் சந்தித்து பேசுகிறேன் என்றார்.

# கச்சதீவு ஒப்பந்தத்தை சீரமைக்குமாறு கம்யூனிஸ்ட் கட்சி வலியுத்துகின்றது



(சென்னை)

இந்திய மீனவர்களின் உரிமையை நிலைநாட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

இந்திய மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்களின் உரிமையை நிலைநாட்ட 1974-76 இல் போடபபட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்ய வேண்டும். இந்தியா- நேபாளம் ஒப்பந்தம் கூட மறுஆய்வு செய்யப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

அதே போல் கச்சதீவு ஒப்பந்தத்தையும் திருத்தி அமைக்கவேண்டும். அப்பகுதியில் மீன் பிடிக்க இந்தியர்களுக்கு உரிமை வழங்க வேண்டும். இந்திய மீனவர்களைக் காப்பாற்ற மத்திய அரசு தவறிவிட்டது. மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வெளியுறவுத்துறை செயலர் நிருபமா ராவ் செல்கிறார்.

மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து இந்திய அரசு, இலங்கை அரசுக்கு கடும் எச்சரிக்கைவிட வேண்டும். தமிழகத்தில் தி.மு.க. அரசு இருக்கிறது. புதுச்சேரியில் காங்கிரஸ் அரசு இருக்கிறது. இவை இரண்டும் மத்திய அரசில் அங்கம் வகிக்கின்றன.

மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து கடிதம், தந்தி அனுப்பி வருவது போதாது. மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க மத்திய அரசிடம் கடுமையாக வலியுறுத்த வேண்டும். இதுவரை இவ்வாறு செய்யாமல் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அரசுகள் இருந்து வருவது ஏன் என்று நாடே கேள்வி கேட்கிறது என்றார்.

# மீனவர்களுக்கு துப்பாக்கி வழங்குமாறு கோரிக்கை

(சென்னை)

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவதைக் கண்டித்து பல்வேறு அமைப்புகள் சார்பில் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மீனவ மக்கள் பேரவை, தமிழ்நாடு புதுவை கடலோர மக்கள் பாதுகாப்பு இயக்கம், தென் இந்திய மீனவ நலச்சங்கம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த ஏராளமான பேர் பொலிஸ் அலுவலகத்தில் கூடினார்களள.

பின்னர் அந்த அமைப்புகள் சார்பில் பொலிஸ் அலுவலகத்தில் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கை மனுவில், இலங்கைக கடற்படையின் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக்கொள்ள தமிழக மீனவர்களுக்கு அரசு துப்பாக்கி வழங்க வேண்டும், உரிய அனுமதி வழங்கி, மீனவர்களுக்கு உரிய துபபாக்கி சுடும் பயிற்சியும் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது.

# மறக்காமல் இருக்கும் மாவிலாறு

**ஆம், உண்மையில் இது ஒரு போர்தான். மாவிலாறு அணைக்கட்டினை வெள்ள நீரிலிருந்து பாதுகாப்பதற்கான எங்களது போரில் நாங்கள் தோற்றுவிட்டோம்' என்கிறார் வெருகல் பகுதியிலுள்ள பொன்னம்பலம் தனேஸ்வரன் என்ற அரச அதிகாரி.**

**இவ்வாறு IPS செய்தித்தளத்திற்காக *Amantha Perera* எழுதியுள்ள செய்திக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்செய்திக்கட்டுரையின் முழுவிபரமாவது,**

இலங்கையின் கால்நூற்றாண்டுகால யுத்த வரலாற்றுடன் தொடர்புடைய, என்றுமே அழியாமல் இருக்கப்போகும் ஒரு பெயர்தான் மாவிலாறு. யூன் 2006ல் இந்த மாவிலாற்றில்தான் மோதல்கள் மீண்டும் முளைவிட்டன.


இலங்கையினது வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழ்ந்துவரும் தமிழர்களுக்குத் தனிநாடுகோரிப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மாவிலாறு அணைக்கட்டின் துரிசுக் கதவினை மூடியதன் விளைவாக துரிசின் வட பகுதியில் வசித்துவந்த பெரும்பான்மையினச் சிங்களவர்களுக்கான விவசாய நீர் தடைப்பட்டது.

இதன்பின்னர் சில வாரகாலப் பிணக்கின் பின்னர் படை நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்த இலங்கை அரச படையினர் துரிசுக்கதவுகளைத் திறந்துவிட்டனர். மாவிலாற்றில் ஆரம்பித்த இந்த படைநடவடிக்கைகள் இடைவிடாது தொடர்ந்தது. இதன் விளைவாக 2009ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கைத் தீவிலிருந்தே அகற்றப்பட்டது.

அண்மையில்கூட மாவிலாறு துரிசுக் கதவுப் பகுதியில் இராணுவத் தலையீடு ஒன்று இடம்பெற்றதெனலாம். இம்முறை இயற்கையுடன் போராடுவதற்காக படையினர் அங்கு வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.

குளத்தின் நீர்மட்டம் சடுதியாக அதிகரிக்க மாவிலாறு அணை உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அணைக்கட்டினைப் பாதுகாப்பதற்காக படையினர் அங்கு வரவழைக்கப்பட்டார்கள். மண் மூடைகளை அடுக்கி படையினர் இந்த அபாயத்தினைத் தடுக்க முனைந்தனர்.

ஆனால் குளத்தின் நீர்மட்டம் வேகமாக அதிகரிக்க அணையின் இன்னொரு பகுதி உடைப்பெடுத்தது. மாவிலாறு அணைக்கட்டினை உடைத்து வெளியேறிய வெள்ளம் வயல் நிலங்கள், வீதிகள், பாலங்கள் என தன்வழியில் தென்பட்ட



அனைத்தையும் நீரில் அள்ளிச் சென்றது.

மாவிலாறு குளத்திற்கான மாகாவலி கங்கையின் நீர் வரவு அதிகரித்ததும் ஜனவரி 8 தொடக்கம் 11 வரை மழை பொழிந்து தள்ளியதும்தான் குளத்தினது அணைக்கட்டு உடைப்பெடுத்தமைக்கான காரணம்.

"ஆம், உண்மையில் இது ஒரு போர்தான். மாவிலாறு அணைக்கட்டினை வெள்ள நீரிலிருந்து பாதுகாப்பதற்கான எங்களது போரில் நாங்கள் தோற்றுவிட்டோம்" என்கிறார் வெருகல் பகுதியிலுள்ள பொன்னம்பலம் தனேஸ்வரன் என்ற அரச அதிகாரி.

வெருகல் பகுதியிலுள்ள இந்த பிரதேச செயலகத்தினை அண்டிய பகுதியிலும் வெள்ள நீர் புகுந்துவிட தனேஸ்வரன் நான்கு, ஐந்து நாட்களாக தனது செயலகத்திற்குள்ளே முடங்கிக்கொண்டார்.

ஆறு அடிக்குமேல் நீர் மட்டம் உயர்ந்ததைத் தொடர்ந்து செயலகக் கட்டத்தின் முதலாவது மாடியிலேயே இவர்கள் இருந்திருக்கிறார்கள். பின்னர் படகுகள் மூலம் தனேஸ்வரனும் ஏனைய பணியாளர்களும் மீட்கப்பட்டிருக்கிறார்கள். உயிர்காக்கும் அங்கியை அணிந்தவாறு இவர்கள் பெரு வெள்ளத்தின் மத்தியிலும் பணியாற்றியிருக்கிறார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் நாங்கள் பெற்ற சொத்துக்களையெல்லாம் இழந்துவிட்டோம். மீண்டும் 2006ஆம் ஆண்டு இருந்த நிலைமைக்கு இந்தப் பிரதேச மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்" என்றார் தனேஸ்வரன்.

வெள்ள நீரில் ஊறிப்போயிருக்கும் பிரதேச செயலக கட்டடம் மட்டும் வெள்ளத்தின் பின்னரும் நிமிர்ந்து நிற்கிறது. ஆனால் வீதிகளும் ஏனைய வெருகல் பிரதேசத்தின் ஏனைய உட்கட்டுமானங்களும் நீரில் அடித்துச்செல்லப்பட்டுவிட்டன.

மத்திய அரசாங்கத்தின் கீழ் வரும் "ஏ" தர வீதியான திருகோணமலை-மட்டக்களப்பு வீதி வெருகல் பகுதி ஊடாகவே செல்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு மில்லியன் மக்களில் 950,000 பேர் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

தனேஸ்வரனின் செயலகத்தினைத் தாண்டி எந்த வாகனமும் பயணிக்க முடியவில்லை. வீதிகளில் பாரிய குழிகள் ஏற்பட்டிருக்கிறன. வெருகல் பாலம் அமைந்திருந்த இடத்தில் இப்போது எதனையும் காண முடியவில்லை. ஆற்றினைப் பாதுகாப்பாகக் கடக்கும் வகையில் நடுவே கயிறு கட்டப்பட்டிருக்கிறது.

ஆற்றுக்கு அப்பால் உள்ளவர்கள் பேருந்து தரிப்பிடத்திற்குச் செல்லவேண்டுமாயின் மூன்று கிலோ மீற்றர்கள் கால்நடையாக வந்து ஆற்றைக் கடந்து பேருந்துக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இதுதான் எங்களது நிலைமை. முன்னர் போர் எங்களை வாட்டி வதைத்தது, பின்னர் ஆழிப்பேரலை அனர்த்தம். இவற்றின் பின்னர் நாங்கள மெல்ல மீண்டு எழும்போது பெருவெள்ளம் அனைத்தையும் அள்ளிச்சென்றுவிட்டது" என ராணி விக்கினேஸ்வரி என்ற வெருகலைச் சேர்ந்த பெண் கவலையுடன் கூறுகிறாள்.

இந்த வெள்ளப்பெருக்கினால் வெருகல் பிராந்தியம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. போருக்குப் பின்னர் மீள்குடியேறிய மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்த 250 தற்காலிக கூடாரங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன என தனேஸ்வரன் கூறுகிறார்.

நீரில் அடித்துச்செல்லப்பட்டிருக்கும் 15 கி.மீ நீளமான பிரதான வீதியும் 35 கி.மீ நீளமான உள் வீதிகளும் உடனடியாகத் திருத்தப்படவேண்டும் என்கிறார் இவர்.

வெருகல் பிரதேச செயலகர் பிரிவிலுள்ள இரண்டு பாலங்களையும் நீர் அடித்துச் சென்றிருக்கிறது. 10 கி.மீ நீளமான நீர்பாசன கால்வாய்கள் சீர்செய்யப்படவேண்டும். தவிர 10,000 கால்நடைகளை வெள்ள நீர் அள்ளிச் சென்றிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக வெருகல் பிரதேசத்தில் 6400 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டிருந்த அறுவடைக்குத் தயாராக இருந்த நெல்வயல்கள் மற்றும் ஏனைய உப பயிர்கள் என்பன முற்றாக அழிந்துவிட்டன.

இதுபோல நெல்வயல்கள் அழிந்திருப்பதுதான் பெரும் பிரச்சினையினை ஏற்படுத்தப்போகிறது என்கிறார் தனேஸ்வரன்.

"இம்முறை நெல் சிறப்பாக விளைந்திருக்கிறது என்றும் அறுவடை சிறப்பாக இருக்கும் என்றும் அனைத்து விவசாயிகளும் ஆவலுடன் இருந்தவேளையில்தான் இந்த அனர்த்தம் ஏற்பட்டது" என்கிறார் அவர்.

ஒவ்வொரு ஏக்கர் நெல் அறுவடைசெய்யும்போதும் தங்களுக்கு 1,000 டொலர் கிடைக்கும் என்றும் இந்தத் தொகையில் 30 சதவீதம் இலாபமாகக் கிடைக்கும் என விவசாயிகள் பேராவலோடு இருந்தார்கள். நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டதன் விளைவாக வெருகல் பிரதேசத்தில் மாத்திரம் 500,000 டொலர் நட்டம் ஏற்பட்டிருப்பதாக தேவநேசன் கூறுகிறார்.

"மோதல்கள், ஆழிப்பேரலை தந்த கொடும் துயரம் என்பற்றின் மத்தியில் கடந்த ஆண்டுகளில் வாழ்ந்துவந்த மக்கள் தற்போது வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட உணவுப்பொருட்களின் விலையேற்றத்திற்கு ஈடுகொடுக்க முடியாது தவிக்கிறார்கள்" என சேவ் த சில்ரன் என்ற சிறுவர்களுக்கான தொண்டு நிறுவனத்தினைச் சேர்ந்த அவசரகால பணிப்பாளர் கறீத் ஒவுன் கூறுகிறார்.

எங்களது வளங்களை, உழைப்புகளை இயற்கையோ அல்லது மனிதனோ அழித்துவிடுகிறான். இயற்கையின் கையில் சிக்கி நாங்கள் தவித்தது இதுதான் இறுதி முறையாக இருக்கட்டும்" என்கிறார் தனேஸ்வரன்.



# கல்லறை நோக்கிய தோழர் சதீஸின் இறுதிப் பயணங்கள்...







## போர்க்குற்றச்சாட்டை அடியோடு மறுக்கிறார் ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி மேஜர்ஜெனரல் சவேந்திரசில்வா



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தன் மீது சுமத்தப்பட்டு வருகின்ற போர்க் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார்.

அமெரிக்காவில் அமைந்துள்ள தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே தன் மீதான போர்க்குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்துள்ளார்.

வன்னி இறுதிக் கட்டப் போரின் போது அப்பாவித் தமிழ் மக்களை படைத்தரப்பினர் கொன்றதாக வெளிவரும் செய்திகள் குறித்து [illegible]ரிக்கையாக இருக்குமாறு அவர் அங்கு [illegible]டியிருந்த மக்களிடம் கேட்டுக் கொண்டதோடு, புலிகளே தமிழ் மக்களை தமது பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

புலிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை படைத்தரப்பினரே காப்பாற்றியதாகவும், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரமுயன்ற தமிழ் மக்களை புலிகளே சுட்டதாகவும் சவேந்திர சில்வா தனதுரையில் தெரிவித்துள்ளார்.

இவரின் உரை முடிந்து இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போது இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த சுபா சுந்திரலிங்கம் என்பவர், சர்வதேச அனுசரணையுடன் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடைய வந்த புலிகளின் [illegible]லைவர்களை சுட்டுக் கொல்லுமாறு உத்தர[illegible]ிட்டதாக சவேந்திர சில்வா மீது நேரடியாக குற்றம் சுமத்தினார்.

இக் குற்றச்சாட்டை மறுத்த சவேந்திர சி[illegible]வா, தான் ஒரு போர்க்குற்றவாளியாக இருந்தால், ஒரு நாள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அதற்குரிய தண்டனையை அனுபவிப்பேன் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், இக் கேள்வியைக் கேட்டதிற்காக தான் மகிழ்ச்சி அடைவதாகவும், உங்களைப் போன்ற துணிவான இலங்கையர்கள் இருப்பது குறித்து தான் பெருமை அடைவதாகவும் அவர் கூறினார்.

இந் நிலையில், வன்னி இறுதிக் கட்டப் போரின் போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டும் என சுபா சுந்தரலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

போரின் போது அப்பாவித் தமிழ் மக்களை சுட்டுக் கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்ட படையினர் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட சவேந்திர சில்வா, மொத்தத்தில் புலிகளின் பயங்கரவாதத்தில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாறறுவதில் படைத்தரப்பினர் மனிதாபிமான முறையில் செயற்பட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், வன்னிப் போரின் போது மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டிருப்பின் அது ஒரு நாள் வெளிவரும் எனக் குறிப்பிட்ட அவர், 2009ஆம் ஆண்டு புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் இருந்து தான் தப்பியது தனது குற்றமற்ற தன்மையின் வெளிப்பாடு எனவும் கூறினார்.

போர்க்குற்றச்சாட்டுக்களை சுமத்துபவர்கள் இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை வெளிவரும் வரை பொறுமையுடன் இருக்கும் படியும் அவர் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்ற சவேந்திர சில்வாவுக்கு எதிராக தேவாலயத்தின் முன் கூடியிருந்த அமெரிக்க வாழ் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

### அச்சுவேலி நாவற்காட்டில் ...

மாலை 6.45 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் சிக்கிய இராஜதுரை ரஜீவன் (வயது-21) என்பவர் அந்த இடத்திலேயே மரணமடைந்து விட்டார் இவரே மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தார். இவருடன் கூட இருந்து பயணித்தவரான இராஜ துரை பஜிந்தன் (வயது-20) என்பவர் இச்சம்பவத் தின்போது படுகாயமடைந்துள்ளார்.

இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவத்தில் மோதுண்ட வானை ஓட்டிவந்த சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பியோட முயற்சித்ததாகவும் அவரைஅப்பகுதி மக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வீதிவிபத்துச் சம்மந்தமாக அச்சுவேலிப் பொலிசார் மேலதிக விசாரணைகளை நடாத்தி வருகின்றனர். (03)

### இறுதியுத்தத்தின் விலை அதிகம் மத்திய வங்கி ஆளுநர் சாட்சியம்



(கொழும்பு)

மூன்று ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் போருக்காக 5,500 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி ஆளுனர் அஜித் என். கப்ரால் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியால் நியமிக்கபபட்ட நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு 1000 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவிருந்த இலங்கையின் படைத்துறை நிதி ஒதுக்கீடு 2009இல் 1700 மில்லியனாக அதிகரித்தது. போர் முடிவுக்கு வந்த போதும் நாட்டின் படைத்துறை நிதி ஒதுக்கீடு குறைக்கப்படவில்லை. தற்போது 1900 மில்லியன் டொலர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

புலிகளும் பல்வேறு வகைப்பட்ட வரி அறவீடு மற்றும் வங்கிகளை நிறுவி நிதி நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், நிதி சேகரிப்பிற்கான அனைத்துலக வலையமைப்பினைக் கொண்டிருந்ததாகவும் மத்திய வங்கி ஆளுனர் தெரிவித்துள்ளார்.

1996ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள மத்திய வங்கி மீது நடாத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மத்திய வங்கி ஊழியர்கள் 41 பேர் உயிரிழந்தாகவும், அத்தாக்குதலில் மொத்தமாக 91 பேர் கொல்லப்பட்டு, 1400 பேர் காயமடைந்ததாகவும் அஜித் என். கப்ரால் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்துள்ளார்

### நீதியின் தீர்ப்பும்...

சரிவரப்பயன்படுத்தி எமது மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் சிறப்புடன் நாம் ஆற்றி வருகின்றோம்.

இந்நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் எமது கட்சிக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்து எமது வரலாற்று வாழ்விடங்களைத் தூக்கி நிறுத்த கரம் கொடுத்து உதவுவோம் என்று உற்சாகத்துடன் காத்திருந்த எமது மக்கள் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையினால் துயரத்தில் சோர்வடைந்து நம்பிக்கை இழக்கத் தேவையில்லை.

எமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து சட்ட ரீதியாக அணுகுவதில் சாத்தியம் உண்டு என்று நம்பும் நாம் இது குறித்து வழக்குத் தாக்கல் செய்வதற்கு தீர்மானித்திருக்கின்றோம். நீதியின் தீர்ப்பும் மக்களின் தீர்ப்பும் எமது நேர்மைக்கும் உழைப்பிற்கும் வெற்றிகளை வழங்கியே தீரும் சத்தியங்கள் சாகாவரம் பெற்று வாழும்

எதிர்பார்த்திருக்கும் நீதிமன்ற தீர்ப்பானது எமது மக்களின் வெற்றியாக அமையும் என்றே நாம் நம்புகின்றோம். எந்தவொரு சூழலிலும் எமது மக்களின் உரிமைக்கும் சேவைக்குமான உழைப்பும் பணியும் தடையின்றி தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### இந்திய மீனவர் மீது...

மாநாட்டில் கலந்து கொள்வதற் காக நேற்று விமானம் மூலம் புதுடில்லி சென்றார். இந் நிலை யில், இந்தியப் பிரதமர் மன்மோ கன் சிங்கை இன்று சந்தித்து பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.


இச் சந்திப்பின் போது இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்பட்டு வரும் நிகழ்வுகளை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி பிரதமர் மன்மோகன் சிங்கை விலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியையும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

தமிழகத்தில் விரைவில் நடைபெறவுள்ள சட்டசபை தேர்தலில் தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டணி என்பது உறுதியாகியுள்ள நிலையில் தொகுதிப் பங்கீடு மற்றும் பரப்புரை தந்திரோபாயங் கள் குறித்தும் அவர் முக்கிய ஆலோசனை நடாத்த உள்ளதாக தெரிய வருகின்றது.

நாளை புதுடில்லியில் நடைபெறும் உள்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட பின் முதலமைச்சர் கருணாநிதி நாளை மாலையே விமானம் மூலம் சென்னை திரும்புவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சட்டசபைத் தேர்தல் விரைவில் நடைபெற வுள்ள நிலையில் முதலமைச்சர் கருணாநிதியின் இந்தப் புதுடில்லிப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என அரசி யல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.



### வன்னியில் பறிபோகும்...

பறிபோய் விடுமோ என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அச்சம் வெளியிட்டிருக்கின்றார்கள்.

தாமதமின்றி அந்தப் பகுதிகளில் தம்மை மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். இது தொடர்பாக இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் அவர்களுக்கு மகஜர் ஒன்றை அந்த மக்கள் அனுப்பி வைத்துள்ளார்கள்.

இதேவிடயம் அடங்கிய மகஜர் ஒன்றை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கும் இம் மக்கள் அனுப்பி வைத்துள்ளனர். இடம்பெயர்ந்த நிலையில் மனிக்பாம் முகாமிலும் உறவினர் நண்பர்களது வீடுகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இந்த மக்கள் பல்வேறு பற்றாக்குறைகளையும், வசதியீனங்களையும் எதிர்நோக்கி வருவதாக இந்த மக்கள் கூறுகின்றனர்.

போர் நடைபெற்ற வன்னிப்பிரதேசத்தைச் சேர்ந்த பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் அந்த இடங்களில் மக்களை அரசு மீள்குடியேற்றம் செய்து வருகின்றது. இடம்பெயர்ந்து மனிக்பாம் முகாமில் தங்கியுள்ள சுமார் 20 ஆயிரம் பேர் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள போதிலும் முறிகண்டி பிரதேசத்தில் அரசாங்கம் தனது தேவைக்காகக் குடியிருப்பு காணிகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதனை அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களும் அரசியல் கட்சிகளும் ஆட்சேபித்திருந்தன. அத்துடன் கடந்த முறை இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவுத் துறை செயலாளரின் கவனத்திற்கும் இந்த விடயம் கொண்டு வரப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து முறிகண்டி பிரதேசத்தின் ஒருசில பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தப் பிரதேசத்தின் மீள்குடியேற்றம் இன்னும் முற்றுப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கையின் சுதந்திர...

இதேவேளை, வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் மேசன் தொழில் டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்த முன்னாள் போரளிகள் 500 பேருக்கு இன்று சான்றிதழ் வழங்கவுள்ளதாக பிரிகேடியர் ரணசிங்க மேலும் தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீர மைப்பு அமைச்சின் கீழுள்ள பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையம், யாழ் ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் முன்னாள் போராளிகளுக்கு புனர் வாழ்வளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் ... சபை, யாழ்ப்பாணம்.

# அரசாங்கத்துடன் அடுத்த கட்டப் பேச்சு; தயாராகிறது தமிழ் தேசியக் கூட்டமைப்பு



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது வன்னிப் போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், காணாமல் போனவர்கள் விவகாரம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவை குறித்து கவனம் செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்தும் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இம்மாதம் 10 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் முதலாவது சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இதன் தொடர்ச்சியாக இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகள் 21 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் அமெரிக்கா சென்றதால் இச்சந்திப்பு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் அமைச்சர்களான ரட்ண சிறி விக்கிரமநாயக்க, நிமால் சிறிபால டி சில்வா, ஜி.எல். பீரிஸ் ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் இவ்விரு தரப்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனுக்கும் இடையில் இரு தடவைகள் தனித்தனியே பேச்சுகள் இடம்பெற்றிருந்ததுடன், இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த வருடம் சில சந்திப்புகள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் புதிதாக 65 நீதிமன்றங்கள்

(கொழும்பு)

நாட்டில் தேங்கியுள்ள வழக்குகளை துரிதமாக மேற்கொண்டு முடிப்பதற்காக புதிய 65 நீதிமன்றங்கள் திறந்து வைக்கப்படவுள்ளதாக வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் ஷிப்லி அசீஸ் தெரிவித்துள்ளார்.


கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த நிலையில், ஆசிய சட்ட வர்த்தக மாநாடு, கொழும்பில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாடு எதிர்வரும் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

# அரசுக்கு எதிர்காலம் இல்லை மாபெரும் ஆர்ப்பாட்ட முஸ்தீபு

## ஐக்கிய தேசியக் கட்சி தயாராகிறது



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 9 ஆம் திகதி கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை எதிர்கட்சி தலைவர் ரணில் விக்ரகிமசிங்க விடுத்துள்ளார். கம்பஹா மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கு எதிர்காலம் ஒன்று இல்லை என குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, இந்த அரசாங்கத்தை பதவியிலிருந்து நீக்குவதற்கு இந்த மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## கே.பி. யாழ். நகருக்கு...

என்னுடன் தொடர்பு கொண்டு உதவுமாறு கோரினார்கள். வடமராட்சியில் நாம் எமது கிளை நிறுவனத்தை நிறுவி அதன் மூலமாகத் தொண்டுகளை மேற்கொள்ள உள்ளோம்.

வன்னி மக்கள் யுத்தத்தில் தமது உறவுகளை இழந்துள்ளனர். இழந்த உயிர்களைத் திருப்பிக் கொடுக்க முடியாது. எனவே அவர்களுக்கு நான் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க இருக்கிறேன். எனது நிறுவனத்தின் ஊடாக அவற்றை நான் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறேன் என்றார்.

கேபியின் வருகையை ஒட்டி யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வளாகத்தைச் சுற்றிக் கடுமையான பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## மெல்லச் சாகுது தமிழ்

# கொழும்பு பல்கலைக்கழகத்தி[ன்] இன்றைய நிலை இதுதான்



(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தின் ... இடங்களிலும் ...ழ்க் கொலை இடம்பெறு... சர்வசாதாரண... ஆகிவிட்டது.

ஆனா... கொழும்பு ... கலைக்கழகத்... தமிழ் கொ... தான் ஜீரண... முடியாததாக ... ளது.

கொழும்புப் பல்கலைக்கழகம் என்கிற சொல் கடந்த ... வருடங்களாக "கொமம்புப் பல்கலைக்கழகம்" என்று ... பல்கலைக்கழகத்தில் பெயர் பொறிக்கப்பட்டு உள்ளது.

இத்தமிழ் கொலை தலை நகரில் வாழும் தமிழ் புத்திஜீவ... கொழும்பு பல்கலைக்கழக கல்விச் சமூகத்தினர் ஆகியே... கண்களை இன்னமும் குத்தாதது பேரதிசயமாக உள்ளது. ... லச்சாகுது எமது தமிழ். அதற்கு உயிர்ப்பூட்ட யார் தயார்?

## - உள்ளூராட்சி சபைத் தேர்தல் -

# தபால்மூலமான வாக்களிப்புக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் விண்ணப்ப[ம்]

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பொருட்டு அஞ்சல் மூலமாக வாக்களிக்க இதுவரை இரண்டு லட்சத்து 50 ஆயிரம் பேர் வரை விண்ணப்பித்துள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் காரியாலயங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல் காரியாலயங்களுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கும் முறைமைக்கிணங்க, தெரிவு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அவற்றின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் குருணாகல் மாவட்டத்திலேயே அதிக அஞ்சல் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இதன்போது 43 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கடுத்தபடியாக அநுராதபுரம் மாவட்டத்தில் 40 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதேவேளை, கேகாலை மாவட்டத்தில் 18 ஆயிரம் விண்ணப்பங்களும், பொலன்னறுவை மாவட்டத்தில், 14 ஆயிரம் விண்ணப்பங்களும், இரத்தினபுரியிலிருந்து 13 ஆயிரம் விண்ணப்பங்களும் கிடைத்துள்ளதாக தேர்தல் காரியாலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, களுத்துறை மாவட்டத்தில் 16 ஆயிரம் அஞ்சல் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இதனிடையே, உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பாக... சல் மூல வாக்களிப்பிற... விண்ணப்பிற்கும் கால அ... சம் இன்றுடன் நிறைவடைக்...

கடந்த உள்ளூராட்சி ச... தேர்தலின் போது நாடளா... ரீதியாக சுமார் 4 லட்சம் அ... சேவையாளர்கள் விண்ணப்... திருந்தமை குறிப்பிடத்தக்...

## யாழ்ப்பாணத்தின்...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கிய நாடுகள் தங்களது ஆயுதங்களை காட்சிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Study In the
UNITED KINGDOM
இறுதிச் சந்தர்ப்பம்
IELTS தேவையில்லை
March / April Intakes in Progress
2011 July இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீ[ழ்] IELTS 5.5 உள்ளடங்கலாக பல கடுமையான கட்டுப்பாட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதால் அதற்கு முன்னர் உங்கள் விசாக்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
Degree Programme - No IELTS
Basic Requirements
G.C.E. (O/L)
G.C.E. (A/L - at least 2 passes
Postgraduate Diploma + MBA
Basic Requirements
G.C.E. (O/L), G.C.E. (A/L)
Any Degree
உங்களுக்கான அனுமதிகள், ஆவணங்களை தயார்ப்படுத்த[ல்] என்பன எங்களால் நேர்த்தியான முறையில் செய்து தரப்படு[ம்]
சகல நாடுகளுக்குமான அனைத்துவித Documentation மற்றும் விசாக்களும் 100% உத்தரவாதத்துடன் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் பெற்றுத் தரப்படும்.
Jaffna: BRITISH COLLEGE OF HIGHER STUDIES
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road) (above Cosy Hotel & Near Ariyakulam Junction)
T.P: 0212224550
Eisc EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS
30-1/14, W.A. De Silva Mawatha (Above Hotel Saravana Bavan) Colombo 6. Tel:2500207 E-mail:eisc_2007@yahoo.com
Robin: 0777 222 422 Selva: 0714 299 935 Web: www.expresslanka.co[m]

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC ஷாலோம் SHALOM
SHALOM வழங்கும் நற்செய்தி...!
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் - மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்-
SHALOM 20/1, 2வது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தீவகத்தில் SHALOM, சிற்பன வீதி, வங்களாவடி, வேலணை.
தொலைபேசி : 0217901798 - 0771044861
(C/411)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது